# ஆண்டறிக்கை
# 2017



**සී/ස හලාවත වැවිලි සමාගම**
**சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்**
**CHILAW PLANTATIONS LTD**

රාජ්‍ය ව්‍යවසාය සංවර්ධන අමාත්‍යාංශය
தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு
Ministry of Public Enterprise Development

# உள்ளடக்கம்


| | பக்க இல. |
|---|---|
| துாரநோக்கு மற்றும் பணிக்கூற்று | 02 |
| நிதிசார் முக்கிய தகவல்கள் | 03 - 04 |
| தலைவரின் மீளாய்வு | 05 |
| பணிப்பாளர் சபை | 06 - 07 |
| சிரேஷ்டமுகாமைத்துவ உறுப்பினர்கள் | 08 |
| முகாமைத்துவ மீளாய்வு | 09 - 23 |
| நிதி மீளாய்வு | 24 - 28 |
| நிறுவனத்தின் ஆளுமை | 29 |
| அபாய முகாமைத்துவம் | 30 - 31 |
| கணக்காய்வு குழு அறிக்கை | 32 |
| **நிதி அறிக்கைகள்** | |
| பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை | 33 - 35 |
| பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று. | 36 |
| கணக்காய்வாளர் தலைமையகத்தின் அறிக்கை | 37 - 39 |
| முற்றடக்கிய வருமானக் கூற்று | 40 |
| நிதிநிலமைக் கூற்று | 41 |
| உரிமையாண்மை மாற்றல் கூற்று | 42 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 43 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 44 - 70 |
| பத்து ஆண்டுச் சுருக்கம் | 71 |
| வருடாந்த பொதுக்கூட்டத்துக்கான அறிவித்தல் | 72 |
| பெறுகை (Proxy) படிவம் | 73 |
| நிறுவனத்தின் தகவல்கள் | Inner back cover |

# துாரநோக்கு

தென்னை உற்பத்தியின் மூலம் நிலைபெறுதகு அபிவிருத்தியின் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கான ஆகக்கூடிய பங்களிப்பினை வழங்கள்

# பணிக்கூற்று

வரையறுக்கப்பட்ட வளங்களின் பயன்பாட்டினை பயனுள்ள மற்றும் திறமையான முறையில் பயன்படுத்துவதன் மூலம் தென்னை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை நிலையான அபிவிருத்தி அடையச்செய்வதும், ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் மூலம் பொதுமக்கள் மற்றும் ஊழியர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல்.

# பெறுமதிகள்

நேர்மை

தொடர்தண்மை

வெளிப்படைதன்மை

தலைமைத்துவம்

கூட்டு முயற்சி

அதிகாரமளித்தல்

புதுமையான

தொழில்முறை

பொறுப்பு மற்றும் பொறுப்புகூறல்

# நிதிச் சுருக்கம்

| | 2017 | 2016 | வித்தியாசம்% |
|---|---|---|---|
| தென்னை உற்பத்தி "தேங்காய்கள்" "000 | 11,651 | 16,522 | (29) |
| **சுருக்கப் பெருபேறுகள்** | **Rs' 000** | **Rs' 000** | **%** |
| வருமானம் | 516,178 | 383,090 | 34.74 |
| மொத்த இலாபம் | 205,574 | 148,707 | 38.24 |
| வரி வட்டிக்கு முன் இலாபம் | 160,112 | 117,454 | 36.32 |
| வரிக்கு முன் இலாபம் | 126,415 | 84,817 | 49.04 |
| வரிக்கு பின் இலாபம் | 82,149 | 70,764 | 16.09 |
| மொத்த ஒதுக்கங்கள் | 747,876 | 695,727 | 7.50 |
| தேக்கு (Timber) மர ஒதுக்கங்கள் | 82,328 | 61,841 | 33.13 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | | 30,000 | |
| மொத்த பங்கிலாபம் (1992-2016) | 456,650 | 456,650 | - |
| **நிதிநிலமை** | | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 1,062,090 | 978,182 | 8.58 |
| முதிர்ந்த/ முதிர்வுறாத பயிர்ச்செய்கைகள் | 802,088 | 728,533 | 10.10 |
| நடைமுறைசொத்துக்கள் | 293,680 | 300,494 | (2.27) |
| இறுப்புக்கள் | 58,754 | 100,759 | (41.69) |
| குறுங்கால முதலீடுகள் (நிலையான வைப்புக்கள்) | 190,312 | 140,868 | 35.10 |
| மொத்த சொத்துக்கள் | 1,355,769 | 1,278,676 | 6.03 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 120,785 | 134,591 | (10.26) |
| நடைமுறையல்லாத பொறுப்பு | 287,108 | 248,358 | 15.60 |
| கூறப்பட்ட மூலதனம் | 200,000 | 200,000 | - |
| பங்காளர்களின் நிதிகள் | 947,876 | 895,727 | 5.82 |
| **நிதிசார் குறிகாட்டிகள்** | | | |
| நடைமுறை வீதம் (தடவைகள்) | 2.43 | 2.23 | 8.90 |
| விரைவு விகிதம் (தடவைகள்) | 1.94 | 1.48 | 31.06 |
| மொத்த இலாபவீதம் % | 39.83 | 38.82 | 2.60 |
| பங்கிற்கான வருவாய் (ருபா.) | 4.07 | 3.48 | 16.95 |
| சராசரி உரிமையாண்மை மீதான வருமானம் - (ROE) - % | 8.91 | 8.08 | 10.24 |
| ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள மூலதனம் மீதான வருமானம் (ROCE) - % | 12.96 | 10.27 | 26.29 |
| கடன் வீதம் | 0.30 | 0.30 | 0 |
| பங்காளர்களின் நிதிவீதம் | 69.91 | 70.05 | (0.20) |
| வட்டி உள்ளடங்கள் (தடவைகள்) | 4.75 | 3.60 | 32.03 |


வருமானம்
ரூபா. (மில்.)
550
450
350
250
150
50
516
383
35%
2016
2017
2016 - LKR 383 Mn.
2017 - LKR 516 Mn.


மொத்த இலாபம்
ரூபா. (மில்.)
250
200
150
100
50
206
149
38%
2016
2017
2016 - LKR 149 Mn.
2017 - LKR 206 Mn.


வரிக்கு முன் இலாபம்
ரூபா. (மில்.)
130
110
90
70
50
126
85
48%
2016
2017
2016 - LKR 85 Mn.
2017 - LKR 126 Mn.


மொத்த இலாப வீதம்
%
40%
40%
39%
39%
40%
39%
3%
2016
2017
2016 - 39%
2017 - 40%


சொத்து அடிப்படை
ரூபா. (மில்.)
1400
1350
1300
1250
1200
1356
1279
6%
2016
2017
2016 - LKR 1,279 Mn.
2017 - LKR 1,356 Mn.


பங்காளர் நிதி
ரூபா. (மில்.)
960
940
920
900
880
860
948
896
6%
2016
2017
2016 - LKR 896 Mn.
2017 - LKR 948 Mn.


நடைமுறை நடவடிக்கைகள்
மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்
ரூபா. (மில்.)
200
150
100
50
180
76
137%
2016
2017
2016 - LKR 76 Mn.
2017 - LKR 180 Mn.


குறுங்கால முதலீடு
ரூபா. (மில்.)
200
150
100
190
141
35%
2016
2017
2016 - LKR 141 Mn.
2017 - LKR 190 Mn.


மூலதனச் செலவுகள்
ரூபா. (மில்.)
115
110
105
100
95
115
103
12%
2016
2017
2016 - LKR 103 Mn.
2017 - LKR 115 Mn.


பங்கொன்றுக்கான உழைப்பு
ரூபா.
4.5
4
3.5
3
4.07
3.48
17%
2016
2017
2016 - Rs. 3.48
2017 - Rs. 4.07


ROCE
%
15%
10%
5%
0%
10.27%
12.96%
26%
2016
2017
2016 - 10.27%
2017 - 12.96%

நிறுவனத்தின் தலைவராகவும் பணிப்பாளர் சபையின் சார்பாகவும், 2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிதி ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆண்டின் போது பல சவால்களுக்கு முகங்கொடுத்த போதும் விசேடமாக மிக மோசமான காலநிலை நிலைமை நிலவிய நிலையில், நிறுவனம் வருமானமாக ரூபா. 516 மில்லியன்களை பதிவு செய்த அதே வேலை தேறிய இலாபமாப ரூபா. 82 மில்லியன்களை உழைத்துள்ளது. 2008 ஆம் ஆண்டில் அரசாங்கம் இந்நிறுவனத்தை பொறுப்பேற்றுக்கொண்டது முதல் இந்த இலாபமே அதி கூடிய இலாபமாக காணப்படுகின்றது. இந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு ஊழியர்களின் பங்களிப்பு பாரியதாக இருந்த அதே வேளை, கிரயத்தினை குறைத்துக்கொள்வதற்கு முகாமையினால் பின்பற்றப்பட்ட உபாயங்கள் மற்றும் வினைத்திறனான பயிர் பல்வகைமை செயன்முறை நிறுவனத்தின் செயலாற்றுகையை மேம்படுத்தியுள்ளது. உயர் விற்பனை மற்றும் இலாபத்திற்கு நியாயமான சந்தை விலை ஒரு காரணியாகும்.

### தெங்கு

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு மற்றும் பொதுவாக நாடு பூராக தெங்கு உற்பத்தியில் வீழ்ச்சியொன்று 2017 இல் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது பயிர்களில் வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்திற்கு 29% வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இருந்த போதும், 2017 ஆம் ஆண்டில் (NSA) தேறிய சராசரி விற்பனை பெறுமதி ரூபா. 42 ஆகும். இது 2016 ஆண்டு (NSA) ரூபா. 25 உடன் ஒப்பீடு செய்யும் போது 68% மான அதிகரிப்பு தொழில்முயற்சிகள் சாதகமாக இருப்பதற்கு உதவி புரிந்தது. இரண்டு வருடங்களின் போது நிலவிய மிக மோசமான காலநிலை இந்த பயிர் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்ததோடு இது எதிர்வரும் வருடங்களிலும் தாக்கத்தை செலுத்தக்கூடும்.

### தெங்கு பெறுமதி சேர்த்தல்

ஆண்டின் போது 242,250 கிலோ கிராம் கொப்பராவை வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் உற்பத்தி செய்துள்ளதோடு வழமையாக ஒரு கிலோ கொப்பராவை ரூபா. 199 சராசரி விலையில் விற்பனை செய்தது. மேலும், பழுகஸ்வெவ எண்ணெய் ஆலையில் 8380 லீட்டர் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டதுடன் இது சந்தையில் பாரிய கேள்வியை ஏற்படுத்தியது. உற்பத்தி அளவு மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கு உத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### மர முந்திரிகை

நாட்டில் பாரிய அளவில் மரமுந்திரிகையை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுள் ஒன்றாக வரை. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் காணப்படுகின்றது. இது ஆண்டின் போது 34,289 கிலோ கிராம் மரமுந்திரிகை உற்பத்தி செய்வதுடன் இறுதி பதப்படுத்தப்பட்ட உற்பத்தியாக 2,154 கிலோ கிராம்களை எமது பதப்படுத்தல் நிலையத்தில் உற்பத்தி செய்துள்ளத. இது சந்தையினையும் தன்பக்கம் கவர்ந்துள்ளது. இத்துறையில் முன்னெடுப்பாக பெறுமதி சேர்த்தல் இணங்காணப்பட்டுள்ளது.

### மூலதன முதலீடுகள்

2017 ஆம் ஆண்டின் போது வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் ரூபா. 115 மில்லியன் தொகையை முதலீடு செய்துள்ளது. ரூபா. 82 மில்லியன்களை தெங்கு உற்பத்தியிலும், ரூபா. 2 மில்லியன்களை மரமுந்திரிகை, பல்லாண்டுப்பயிர்கள் உற்பத்தியிலும், ரூபா. 31 மில்லியன்களை கட்டடங்கள், இயந்திர சாதனங்கள் மற்றும் ஏனையவைகளிலும் முதலீடு செய்துள்ளது.

### நலன்புரி

நிலைபெறுதன்மை மற்றும் சமூக பொறுப்புக்களுடன் எமது வியாபார உபாயங்களின் இணைப்பு தொடர்பில் நிறுவனமானது அதீத முக்கியத்துவத்தை கொண்டுள்ளது. ஊழியர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கும் சமூகம் மற்றும் சுற்றாடல் நோக்கிய எமது பொறுப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நிறுவனத்தினால் பல முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. சமூக மற்றும் சமூக பாதுகாப்பு தொடர்பாக எடுக்கப்பட்ட பல முன்னெடுப்புக்களில் ஊழியர்களுக்கான வீடுகள், சுகாதார வசதிகளை வழங்குதல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை விநியோகித்தல், சலுகை விலையில் சமூகத்திற்கு தேங்காய் விற்பனை செய்தல் என்பன அவற்றில் சிலவாகும்

### எதிர்கால நோக்கு

மீள் நடுகை மற்றும் பராமரிப்பு தொடர்பான சிறந்த விவசாய செயற்பாடுகள் நிறுவனத்தின் நிலைபெறுதன்மையை மேம்படுத்தும் அதே வேலை, இணை தொழில் முயற்சிகளுக்குப் புறம்பாக பயிர் பன்முகப்படுத்தல் மற்றும் பிற வருமான வருவாய் என்பன நிறுவனத்திற்கான எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு உதவி புரியும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. புத்தளம் மாவட்டத்தில் குறிப்பாக மிகக் கடுமையான காலநிலை மாற்றங்கள் தாக்கம் செலுத்தியதுடன் இது விசேட காரணியாக கவனத்திற் கொள்ளப்பட்டு தீர்வு காணப்படுதல் வேண்டும். அதே வேலை காணி மற்றும் ஊழியர்களிடமிருந்து உச்ச உற்பத்தித் திறனைப் பெற்றுக் கொள்வதற்கு நவீன நீர்ப்பாசன முறைமைகள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பயிர் உபாயங்கள் பின்பற்றப்படுதல் வேண்டும்.

வரை. சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்துக்கு சொந்தமான பளுகஸ்வெவ தோட்டம் தென் ஆசியாவின் பாரிய தென்னந் தோட்டமாக காணப்படும் அதே வேலை இது பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி செயன்முறை உள்ளடங்களாக தெங்கு கைத்தொழில் தொடர்பில் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அறிவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் மாதிரிக் கிராமமொன்றாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இலங்கையில் தென்னை கைத்தொழில்களின் நிலைபெறுதன்மையை தாபிப்பதற்கு இது புத்தாக்கங்களாக உள்ளது.

### நன்றியுரை

மிகுந்த சவால்களுடைய வருடத்தில் வலுவான அர்ப்பணிப்புடனும் தியாகத்துடனும் அமைச்சின் செயலாளர், பணிப்பாளர் சபை, பொது முகாமையாளர் மற்றும் வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் முகாமை செயற்பட்டமைக்காக எனது மனப் பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த ஆண்டின் நிர்ணயிப்பட்ட அடைவுகளை நோக்கி தங்களுடைய அயராக அர்ப்பணிப்புக்காக சகல மட்டங்களிலும் உள்ள எனது பதவியணி அங்கத்தவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது வியாபார பங்காளர்கள், வாடிக்கையாளர்கள், கொள்வனவாளர்கள், விநியோகத்தர்கள், தரகர்கள், வங்கியாளர்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் ஏனைய அக்கறை உடையோர்களுடைய தொடர்ச்சியான நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு மட்டுமல்லாது எமது நிறுவனம் மீது அக்கறை காட்டுனர்கள் என்ற வகையில் தொடர்ச்சியாக வைத்து வருகின்ற நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்கும் எமது நிறுவனத்தின் வெற்றி பாதைக்கு வழங்கி வருகின்ற தொடர்ச்சியான ஆதரவிற்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தலைவர் / பி.நி.அ
வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்

# பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்



**திரு. வீ. கே. சீ. ஹேரத்**

**தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி**

திரு. வீ. கே. சீ. ஹேரத் அவர்கள் 2016ஆம் ஆண்டு ஜுலை 14ஆம் திகதி சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் தலைவர் / பணிப்பாளர் சபை உறுப்பினராக சேவையில் அமர்ந்தார். அவர், குருநாகலவின் பாரம்பரிய வியாபார குடும்பமொன்றில் பிறந்த பரிபூரண தொழில்முயற்சியாளராவார். அவர் ஒரு தென்னந்தோட்ட உரிமையாளராவதுடன் அவரிடமிருந்த வியாபார நிபுணத்துவத்தை இன்றுள்ள நிலைமைக்கு சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தினை விருத்தி செய்ய உபயோகித்தார்.

திரு. வீ. கே. சீ. ஹேரத் அவர்கள் அவரின் தொழில் தொடர்பான முன் நகர்வை கடற்பொருளியல் துறையில் ஆரம்பித்ததுடன் மோட்டார் வாகனத் துறையிலும் 33 வருட கால அனுபவம் பெற்றவராவார். மேலும், அவர் குருநாகலில் உள்ள இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிலையத்தின் உரிமையாளருமாவார்.

திரு. வீ. கே. சீ. ஹேரத் அவர்கள் தெளிவான தொழில்முயற்சியாளரொருவராவதுடன் சர்வதேச வியாபாரத் தொடர்புகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பாரிய அளவில் பங்களிப்பு வழங்கியுள்ளார். சமூகத்தினருக்கு ஆற்றிய மகத்தான சேவைகளிற்காக 2017ஆம் ஆண்டில் இலங்கை மக்கள் தொடர்பாடலினரின் சங்கத்தினால் MASSCO விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

திரு. வீ. கே. சீ. ஹேரத் அவர்கள் ஆசிரி லுப்ரிகன்ட்ஸ், ஆசிரி என்டப்ரைஸஸ் மற்றும் ஆசிரி ஒட்டோ பஜாஜ் - ஸ்ரீ லங்கா மற்றும் ஆசிரி லங்கா எரிபொருள் நிலையம் ஆகியவற்றின் உரிமையாளர் ஆவார். செவ்ரோன் (Chevron) லுப்ரிகன்ட்ஸ் லங்கா பீஎல்சீ நிறுவனம் அவருக்கு 2014ஆம் ஆண்டிற்கான சிறந்த வினைத்திறனுக்கான விருதினை வழங்கியது.

அரசியல் அலுவல்கள், ஊழியர் சந்தை தொடர்பான அலுவல்கள் மற்றும் சிவில் சமூகத்தினரின் பங்களிப்பு தொடர்பாக நீண்ட கால அனுபவமுள்ள அவர் நன்கு அனுபவமுள்ள தலைவர், தொடர்பாடல்வியலாளர் மற்றும் பேசிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் அனுபவமுள்ளவராவார்.



**திரு. எம். கே. எம். செனவிரத்ன (L.L.B)**

**நிறைவேற்றுப் பணிப்பாளர்**

திரு. எம். கே. எம். செனவிரத்ன அவர்கள் 2015 மே மாதம் 08ஆம் திகதி சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். மேலும், இவர் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் தலைவர் பதவி வெற்றிடமாக இருந்த 2016 பெப்ரவரி மாதம் முதல் 2016 ஓகஸ்ட் மாதம் வரை தலைவர் பதவியின் கடமைகளை நிறைவேற்றினார்.

இவர் கண்டி சட்டத்தரணிகளின் சங்கத்துடன் இணைந்து செயலாற்றும் சட்டத்தரணியாக 10 வருடங்களுக்கு மேலான அனுபவமுள்ளவர். மேலும், பிரசித்த நொத்தாரிசு, சத்தியப்பிரமான ஆணையாளர் மற்றும் கம்பனி செயலாளராகவும் கடமையாற்றுகிறார். திரு. செனவிரத்ன அவர்கள் கண்டி சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதியாகவும் கடமையாற்றுகிறார். அவர் கண்டி மாவட்டத்தின் காணி சீரமைப்பு ஆணைக்குழுவில் (நிரந்தர சேவையின்றி - freelance) சட்ட அலுவலராகவும் பேராதனை பல்கலைக்கழகத்தின் சபை அங்கத்தவராகவும் கடமையாற்றுகிறார்.

திரு. செனவிரத்ன அவர்கள் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியத்தின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

அவர், சர்வதேச தொடர்புகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்தின் சர்வதேச உறவுகள் தொடர்பான டிப்லோமா சான்றிதழை பெற்றுள்ளார்.



**திரு. பீ. சீ. விஜேவர்தன**

**செயற்பாட்டு பணிப்பாளர்**

திரு. பீ. சீ. விஜேவர்தன அவர்கள் 2017.02.24 ஆம் திகதி செயற்பாட்டு பணிப்பாளராகவும் மற்றும் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டார்.

அவர் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக பல அரசாங்க நிறுவனங்களில் கடமையாற்றியுள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் ஒரு ஆலோசகராகக் கடமையாற்றுகிறார்.

திரு. பீ.சீ. விஜேவர்தன அவர்கள் விஜய கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மற்றும் ட்ரவல்ஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் மற்றும் உரிமையாளராவார்.



**திரு. பீ.பி.எஸ்.சீ. நோனிஸ்**
**பணிப்பாளர்**

திரு. பீ.பி.எஸ்.சீ. நோனிஸ் அவர்கள் 2016 செப்டெம்பர் 05ஆம் திகதி சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணப்பாளர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டதுடன் அவர் திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் சபை அங்கத்தவராகக் கடமையாற்றுகிறார்.

திரு. பீ.பி.எஸ்.சீ. நோனிஸ் அவர்கள் தற்போது நிதி அமைச்சின் நிர்வகிப்பு நாயகமாகக் கடமையாற்றுவதுடன் அரசாங்க சேவையில் 30 ஆண்டுகள் அனுபவமுள்ள இலங்கை நிர்வாக சேவையின் மேற் தர அலுவலகரொருவராவார்.

திரு. பீ.பி.எஸ்.சீ. நோனிஸ் அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விசேட கௌரவத்துடனான வியாபார நிர்வாகம் தொடர்பான பட்டதாரியாவதுடன் தென் அவுஸ்திரேலியா பைன்டர்ஸ் (Finders) பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் தொடர்பான பட்டப் பின் பட்டதாரியாவார் (Masters). மேலும், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் தகுதிச் (Licentiate) சான்றிதழைப் பெற்றுள்ளார்.



**திரு. லக்கதாஸ் ஆசை**
**பணிப்பாளர்**

திரு. லக்கதாஸ் ஆசை அவர்கள் பொது தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக 2016 மே மாதம் 14ஆம் திகதி முதல் கடமையாற்றுகிறார்.

அவர் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகக் கடமையாற்றுவதுடன் பொது தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளராகக் (அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்) கடமையாற்றுகிறார். இவர் இலங்கை நிர்வாக சேவையின் மேற் தர அலுவலகரொருவராவார்.

அவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வியாபார நிருவாகம் தொடர்பான (கௌரவ) (2ஆம் வகுப்பு உயர் பிரிவு) பட்டதாரி. அவர் ஜேர்மனியின் டோர்ட்மன்ட் பல்கலைக்கழகம் மற்றும் பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகத்தின் நகர மற்றும் பிராந்திய திட்டமிடல் பாடசாலை ஒன்றிணைந்து நடாத்தப்படும் பிராந்திய அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்டதாரியாவார்.



**திரு. எச். எம். என். சீ. ஹேரத்**
**பணிப்பாளர்**

திரு. எச். எம். என். சீ. ஹேரத் அவர்கள் 2015 மார்ச் மாதம் 14ஆம் திகதி சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். அவர் கொக்கோ சிலோன் எக்ஸ்போர்ட் கம்பனியின் பணிப்பாளராகவும் கடமையாற்றுகிறார்.

அவர் வயம்ப D/C மற்றும் ஒய்ல் மிலஸ் பிறைவட் லிமிடட், ACME வோட்டர் சிஸ்டம்ஸ் , மெட்ரோ மார்கடிங் ஆகிய கம்பனிகளின் ஸ்தாபகர் / தலைவராவதுடன் A.C. Coir எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவட்) லிமிடட்டின் முகாமைத்துவ பணிப்பாளராவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

## பிரதான அலுவலகம்

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. வீ.கே.சி ஹேரத் | - | தலைவர் |
| 02. | திரு. எம்.கே.பீ செனவிரத்ன | - | நிறைவேற்று அதிகாரி |
| 03. | திரு. பீ.சீ விஜேவர்தன | - | செயற்பாட்டு அதிகாரி |
| 04. | திரு. ஏ.ஜீ.ஆர்.எம்.எம் ரணவீர | - | முகாமையாளர் |
| 05. | திரு. டப்.எல்.டீ பிரனாந்து | - | உ.பொ.மு. பயிர்ச்செய்கை பொறியியலாளர் |
| 06. | திரு. பீ. ஹெட்டிஆரச்சி | - | உதவிப் பொது முகாமையாளர் |
| 07. | திரு. ஆர்.எம்.ஆர்.பீ ரத்நாயக்க | - | சிரேஷ்ட கணக்காளர் |
| 08. | திரு. எச்.பீ.எம்.டபிள்யு ஹேமசந்திர | - | பிரதம உள்ளக கணக்காய்வாளர் |
| 09. | திரு. எம்.எம் மர்லி | - | தோட்ட முகாமையாளர் |
| 10. | திரு. ஏ.ஏ அஷோக ஆனந்த | - | தோட்ட முகாமையாளர் |
| 11. | திரு. டபிள்யு.கே பிரதீப் | - | தொ. நுட்ப முகாமை மற்றும் அபிவிருத்தி |
| 12. | திரு. ஏ.எம்.டீ.எச்.பீ அத்தபத்து | - | மனிதவள முகாமையாளர் |
| 13. | திரு. எம்.கே.என் அபேதீர | - | நிதி முகாமையாளர் |
| 14. | திரு ஏ.என்.ஏ.எஸ் கருணாதுங்க | - | விற்பனை முகாமையாளர் |
| 15. | திருமதி. பீ.என்.என் குணஸீல | - | திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு முகாமையாளர் |

## தோட்ட அத்தியட்சகர்கள்

| | | | |
|---|---|---|---|
| 16. | திரு. ஜே.எச். பெர்ணான்டோ | - | அத்தியட்சகர், பளுகஸ்வெவ பிரதேச தோட்டங்கள் |
| 17. | திரு. ஜீ.எம்.ஏ கருணாதிலக | - | அத்தியட்சகர், சிலாபம் பிரதேச தோட்டங்கள் |
| 18. | திரு. டீ.எம்.ஜீ.ஏ. திசாநாயக்க | - | அத்தியட்சகர், பிங்கிரிய பிரதேச தோட்டங்கள் |
| 19. | திரு. எம்.ஜீ.சீ. டயஸ் | - | அத்தியட்சகர், திவுலபிட்டிய பிரதேச தோட்டங்கள் |
| 20. | திரு. பி.எம்.யு.பி பஸ்நாயக்க | - | அத்தியட்சகர், மாதம்பை பிரதேச தோட்டங்கள் |
| 21. | திரு. ஏ.எம்.டீ. குணதிலக | - | அத்தியட்சகர், தம்பபன்னி பிரதேச தோட்டங்கள் |

## சுருக்கமான அறிமுகம்



### தேசியமயப்படுத்தல்

1975 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த காணி சீர்திருத்த சட்டத்தின் கீழ் நாட்டின் சகல நிறுவனங்களுக்கு சொந்தமாக இருந்த பெருந்தோட்ட நிலங்கள் அரசுக்கு சொந்தமானது. பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதோடு அரசுக்கு சொந்தமாக்கப்பட்ட இடங்களை முகாமை செய்வதற்காக பல முகாமைத்துவ நிறுவனங்களுக்கு ஒப்படைத்ததனால் தோட்டங்களை கண்காணிப்பது ஓரளவு விசாலமான விடயமாக இருந்தது.

### ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை (JEDB) (V)

தேசிய மயப்படுத்தலுக்கு முன்னர் சில பெருந்தோட்டங்கள் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் முகாமை செய்யப்பட்டு வந்தது. அத்தோடு 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாய கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை என்ற பெயரில் புதிய நிறுவனமொன்று 1976 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இவ்விரு நிறுவனங்களுக்கு மேலதிகமாக, சில தேசிய மயப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களில் சிலவற்றை முகாமை செய்வதற்கு, புதிய அடிப்படையிலான நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. உசாவசம (மேல் நாட்டு கூட்டுறவு தோட்டங்கள் அபிவிருத்திச் சபை) மற்றும் ஜனவசம மற்றும் தொகுதிவாரி கூட்டுறவுகள் போன்ற நிறுவனங்களை இவை உள்ளடக்கின. பல முகாமைத்துவ நிறுவனங்களுக்கிடையில் காணி ஒதுக்கீடானது முகாமையின் கடுமையான சீர்குலைவுக்கு காரணமாக அமைந்தன என விவாதிக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு உற்பத்தி வீழ்ச்சி, வீண் விரயம் மற்றும் வினைத்திறனின்மை போன்ற பல தீமைகளுக்கு இவை தாக்கம் செலுத்தியது. காணி சீர்திருத்தத்தின் உடனடி தாக்கம் கைத்தொழில் துறைக்கு சாதகமாக அமையவில்லை.

இச்சூழ்நிலையின் கண்ணோட்டத்தில், 1977 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இந்த துறையில் காணப்பட்ட அக்கறையில் முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் செயன்முறைகளை ஒரு நிலைப்படுத்துவகற்கு பல முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இது உசவசம, ஜனவசம மற்றும் தொகுதிவாரி கூட்டுறவுகளை கலைப்பதனை இது உள்ளடக்கியதுடன் ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை அரச பெருந்தோட்டகூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு இந்த நிறுவனங்களினால் சகல சொத்துக்களும் கையளிக்கப்பட்டன. இந்த இரண்டு பிரதான முகாமை நிறுவனங்களின் முகாமைத்துவ கட்டமைப்புக்கள் பிராந்திய சபையின் முறைமையொன்றின் ஊடாக பன்முகப்படுத்தப்பட்டன. இதன் ஊடாக உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்கில் பிராந்தியங்களுக்கு சுகந்திரத்தையும் தீர்மானம் எடுக்கும் அதிகாரங்களையும் வழங்குகின்றன.

### வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்

1987 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க பொதுக் கம்பனிகளாக அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசுக்குச் சொந்தமான கம்பனிகளை பொறுப்பெடுத்தல் தொடர்பான ஏற்பாடுகளின் பிரகாரம் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டது) இது வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியாக இருப்பதுடன் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையில் செயற்பட்டு வருகின்றது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சார்பாக திறைசேரியின் செயலாளருக்கு முழுமையான பங்குகள் மற்றும் "கோல்டன் ஷெயார்ஸ்" ஒதக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தற்போது வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தினால் முகாமை செய்யப்படுகின்ற தனியார் மயப்படுத்தும் நோக்கத்திற்காக 1992 ஆம் ஆண்டின் அரச உடமையான கம்பனிகளாக அதன் கூட்டிணைப்புக்களை சகல தோட்டங்கள் ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபையினால் V முகாமை செய்யப்பட்டு வருகின்றது.

## எமது தோட்டங்கள்

### பிங்கிரிய பிரதேச தோட்டங்கள்



காணியின் மொத்த பரப்பு : 1,509.66 ஹெக்டேயர்கள் 3,728.66 ஏக்கர்
உள்ளடக்கம் : 25 பரந்துள்ள தோட்டங்கள்
இட அமைவு : பிங்கிரிய, கொபேகனே மற்றும் பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலகம் - குருநாகல் மாவட்ட பிரதேசங்கள்
பிரதான பயிர் : தெங்கு
ஏனைய பயிர்கள் : ட்ராகன் பழம், கருவா, மரமுந்திரிகை

### சிலாபம் பிரதேச தோட்டங்கள்



காணியின் மொத்த பரப்பு : 645.57 ஹெக்டேயர்கள் (1,594.55 ஏக்கர்
உள்ளடக்கம் : 12 பரந்துள்ள தோட்டங்கள்
இட அமைவு : பல்லம, ஆரச்சிகட்டுவ, ரஸ்நாயக்க புர பிரதேச செயலகம் - புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்ட பிரதேசங்கள்
பிரதான பயிர் : தெங்கு
ஏனைய பயிர்கள் : மரமுந்திரிகை, கருவா, ட்ரகன் பழம், மா

### திவுலபிட்டிய பிரதேச தோட்டங்கள்



காணியின் மொத்த பரப்பு : 424.49 ஹெக்டேயர்கள் (1,048.49 ஏக்கர்
உள்ளடக்கம் : 14 பரந்துள்ள தோட்டங்கள்
இட அமைவு : திவுலபிட்டிய, தங்கொட்டுவ, கட்டான திவுலபிட்டிய பிரதேச செயலகம் - கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்ட பிரதேசங்கள்
பிரதான பயிர் : தெங்கு
ஏனைய பயிர்கள் : மிளகு, ரம்புட்டான் , ட்ரகன் பழம்

### மாதம்பை பிரதேச தோட்டங்கள்



காணியின் மொத்த பரப்பு : 655.86 ஹெக்டேயர்கள் (1,619.97 ஏக்கர்
உள்ளடக்கம் : 12 பரந்துள்ள தோட்டங்கள்
இட அமைவு : சிலாபம், நாத்தாண்டிய, உடுபத்தாவ மற்றும் பிங்கிரிய பிரதேச செயலகம் - புத்தளம் மற்றும் குருநாகல மாவட்ட பிரதேசங்கள்
பிரதான பயிர் : தெங்கு
ஏனைய பயிர்கள் : மரமுந்திரிகை, ட்ராகன் மழம் , அன்னாசி

### பளுகஸ்வெவ பிரதேச தோட்டங்கள்



காணியின் மொத்த பரப்பு : 672.22 ஹெக்டேயர்கள் (1,660.38 ஏக்கர்) (தென் ஆசிய பிராந்தியத்தில் தனித்த மிகப்பெரிய தென்னந்தோட்டமாக இது காணப்படுகின்றது.)
இட அமைவு : ஆரச்சிகட்டுவ பிரதேச செயலகம் - புத்தளம் மாவட்ட பகுதிகள்
பிரதான பயிர் : தெங்கு
ஏனைய பயிர்கள் : மரமுந்திரிகை, ட்ரகன் பழம்

### தம்பபன்னி பிரதேச தோட்டங்கள்



காணியின் மொத்த பரப்பு : 1,825.43 ஹெக்டேயர்கள் (4,508.81 ஏக்கர்)
உள்ளடக்கம் : 21 பரந்துள்ள தோட்டங்கள்
இட அமைவு : புத்தளம், கல்பிட்டிய, வனாதவில்லுவ பிரதேச செயலகம் - புத்தளம் மாவட்ட பகுதிகள்
பிரதான பயிர் : தெங்கு
ஏனைய பயிர்கள் : மரமுந்திரிகை

## இணை வியாபாரங்கள் - தென்னை பயிர்ச்செய்கை மற்றும் தெங்கு உற்பத்தி முகாமைத்துவம்

நிறுவனத்துக்கு சொந்தமான மொத்தம் 5,733.23 ஹெக்டேயர் காணியில் 3,815.94 ஹெக்டேயர்களில் தெங்கு பெருந்தோட்டங்களாகவும் விவசாய நிலப்பரப்பாகவும் இருப்பதுடன் அந்த பெருந்தோட்டங்கள் புத்தளம் முதல் கட்டுநாயக்க மற்றும் வடமேல் மாகாணத்தின் கடலோரப் பிரதேசங்களில் பரந்து காணப்படுகின்றன. உற்பத்தித்திறன் மற்ளும் அறுவடை பொதுவாக பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபடுவதுடன் பிரதேசத்துக்கு ஏற்ப உலர் வலயங்களில் குறைந்த அறுவடையும் ஈர வலயங்களில் கூடுதலான அறுவடையும் பெறப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டு நிலவிய மிக மோசமான கோடையின் காரணமாக உற்பத்திகளில் பின்னடைவு ஏற்பட்டதுடன் கணிசமான வீழ்ச்சியையும் கொண்டிருந்தது.

### தென்னை உற்பத்தி

| ஆண்டு | தென்னை அறுவடை (காய்கள்) | வேறுபாடு % | விளைச்சல் தரும் மரங்கள் (எண்ணிக்கை) | வேறுபாடு % | உற்பத்தி திறன் (மரமொன்றுக்கு காய்களின் எண்ணிக்கை | இலங்கை உற்பத்தி (மில்லியன்கள்) | வேறுபாடு % |
|---|---|---|---|---|---|---|---|
| 1992 | 20,782,648 | 0 | 421,875 | | 49 | 2,296 | 0 |
| 1993 | 19,145,214 | -8 | 407,512 | -05% | 47 | 2,164 | -06% |
| 1994 | 21,382,314 | +12 | 426,722 | +03% | 50 | 2,622 | +21% |
| 1995 | 22,603,156 | +6 | 441,379 | +04% | 51 | 2,275 | +05% |
| 1996 | 19,336,658 | -14 | 421,716 | -04% | 46 | 2,546 | -08% |
| 1997 | 19,235,974 | -1 | 412,006 | -02% | 47 | 2,630 | +03% |
| 1998 | 18,921,808 | -2 | 415,718 | +01% | 46 | 2,522 | -04% |
| 1999 | 21,348,626 | +13 | 393,360 | -05% | 54 | 2,828 | +12% |
| 2000 | 23,216,882 | +9 | 399,454 | +02% | 58 | 2,396 | +09% |
| 2001 | 21,829,630 | -06 | 395,435 | -01% | 55 | 2,769 | -11% |
| 2002 | 15,031,795 | -31 | 413,465 | +05% | 36 | 2,392 | -14% |
| 2003 | 17,585,652 | +17 | 402,937 | -03% | 44 | 2,562 | +11% |
| 2004 | 18,354,614 | +04 | 401,162 | 00% | 46 | 2,591 | +01% |
| 2005 | 14,391,265 | -22 | 408,006 | +02% | 35 | 2,515 | -03% |
| 2006 | 17,070,324 | +19 | 411,968 | +01% | 41 | 2,785 | +11% |
| 2007 | 17,815,317 | +04 | 395,762 | -04% | 45 | 2,869 | +03% |
| 2008 | 16,280,051 | -09 | 378,333 | -04% | 43 | 2,908 | +01% |
| 2009 | 18,632,247 | +14 | 380,000 | 00% | 49 | 2,762 | -05% |
| 2010 | 18,256,007 | -2 | 340,586 | -10% | 54 | 2,317 | -16% |
| 2011 | 14,527,770 | -20 | 353,113 | +04% | 41 | 2,808 | +09% |
| 2012 | 15,807,753 | +09 | 312,456 | -12% | 51 | 2,940 | +05% |
| 2013 | 09,595,275 | -39 | 313,048 | +01% | 31 | 2,513 | -14% |
| 2014 | 12,969,381 | 35 | 283,449 | -9% | 46 | 2,870 | +14 |
| 2015 | 12,517,083 | -3 | 288,951 | 2% | 43 | 3,026 | +5 |
| 2016 | 16,522,290 | 32% | 304,043 | 5% | 54 | 2,845 | -7% |
| 2017 | 11,651,155 | -29% | 282,005 | -7% | 41 | 2,450 | -14% |




## தென்னை கீழ்ப்பயிர்ச்செய்கை

தென்னை மரங்கள் குறைந்த விளைச்சலுடன் முதிர்வு கட்டத்தினை அடையும் போது, தாமதிக்காது தென்னை கீழ்ப்பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க வேண்டும். இதற்கான செலவுகள் / கிரயங்கள் அதிகமாயினும் இது எதிர்காலத்துக்கான ஒரு முதலீடாகும்.




## பயிர் பல்வகைமை மற்றும் கால்நடைகள்

நாட்டில் மகா பரிணாம அளவில் தென்னை உற்பத்தி தோட்டங்களைக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் ஒற்றை முறை பெருந்தோட்டங்களாக முகாமைத்துவம் செய்கு வருகின்றனர். குறைவான காணிப் பயன்பாட்டு வினைத்திறனற்ற காணி முகாமை முறையொன்றாக தெங்கு ஒற்றை பயிர் முறை காணப்படுகின்றது. தெங்கு பெருந்தோட்டங்களில் உச்ச காணிப்பயன்பாடு தொடர்பான சிறந்த தேர்வாக இடைப் பயிர்ச்செய்கைகள் காணப்படுகின்றன. எனினும், எமது தோட்டங்களில் இடைப்பயிர்ச்செய்கைகள் மழைவீழ்ச்சி மற்றும் மண்ணின் தன்மை ஆகிய இரண்டு காரணிகளினால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும், பிரதான பயிருக்கு மேலதிகமாக, மரமுந்திரிகை, றம்புட்டான், மிளகு மற்றும் கராம்பு முதலியன பொருத்தமான பிரதேசங்களில் பயிர் செய்கை செய்யப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக காணி உச்சபயன்பாடு மற்றும் இதர வருமானங்களை உருவாக்கும் நோக்கில் எருமை மாடு மற்றும் செம்மறி ஆடுகளை தோட்டத்தில் வளர்த்தல் போன்றனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

## றம்புட்டான் பயிர்ச்செய்கை

றம்புட்டான் பிரபல்யமான பழ வர்க்கமாக இருப்பதுடன் இது பொதுவாக கம்பஹா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றது. திவுலபிட்டிய பிரதேச தோட்டங்களில் ஏறக்குறைய 50 ஏக்கர்களில் றம்புட்டான பயிர் செய்யப்படுகின்றதோடு இது றம்புட்டான் பயிர்ச்செய்கைக்கு மிகப் பொருத்தமான தோட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.





## மிளகு பயிர்செய்கை

மிளகு வெற்றிகரமாக ஈர மற்றும் இடை ஈர வலயங்களில் பயிர் செய்யப்படுவதுடன் மாறாக திவுலபிட்டிய பிரதேச தோட்டங்களுக்கு மாத்திரம் மிளகு பயிர் செய்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.





### கராம்பு பயிர் செய்கை

கராம்புக்குச் சந்தையில் உயர் கேள்வி காணப்படுகின்றது. குறைவான முக்கியத்துவம் உடைய தோட்டங்களைத் தெரிவு செய்து 2011 ஆம் ஆண்டில் கராம்பு பயிர்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. பிங்கிரிய மற்றும் சிலாப பிரதேச தோட்டங்கள் உள்ளடங்கலாக தற்பொழுது வரை 27 ஏக்கர்களில் கராம்பு பயிர் செய்யப்பட்டுள்ளது.





## ட்ராகன் பழம்

உலர் மற்றும் இடைநிலை விவசாய காலநிலை வலயத்தில் மிகச்சிறப்பாக வளர்கின்ற இந்தப் பயிர் முதன் முறையாக 2008 ஆம் ஆண்டில் பிங்கிரிய கினியம தோட்டத்தில் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து 2017 முடிவடையும் வரை பிங்கிரிய, திவுலபிட்டிய, மாதம்பை மற்றும் பளுகஸ்வெவ தோட்டங்களில் 31 ஏக்கர் பரப்பில் பயிர்ச்செய்கை காணப்படுகின்றது.





**2017 ஆம் ஆண்டுக்கான மொத்த இடை பயிர்ச்செய்கை வருமானம்.**

| தோட்டம் | மரமுந்திரிகை | மிளகு | றம்புட்டான் | ட்ராகன் பழம் | கராம்பு |
|---|---|---|---|---|---|
| தம்பபன்னி | 11,571,343 | - | - | - | - |
| பிங்கிரிய | 702,015 | - | - | 1,261,435 | - |
| சிலாபம் | 980,050 | - | - | 2,990 | - |
| மாதம்பை | - | - | - | 48,131 | - |
| திவுலபிட்டிய | - | 177,600 | 946,000 | 459,810 | 1,300,680 |
| பளுகஸ்வெவ | 200,940 | - | - | 38,719 | - |
| **மொத்தம்** | **13,454,348** | **177,600** | **946,000** | **1,811,085** | **1,300,680** |

## கால்நடைகள்

பழுகஸ்வெவ தோட்டத்தில் எருமை மாடு செயற்திட்டத்திலிருந்து பசும் பால் எடுக்கப்பட்டு தயிர் மற்றும் யோகட் உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படுவதுடன் பளுகஸ்வெவ தோட்டம் மற்றும் தலைமை அலுவலக வளாகத்தில் இரண்டு விற்பனை நிலையங்கள் ஊடாக அவை விற்பனை செய்யப்படுகின்றன.






### எருமை மாடு / செம்மறி ஆட்டு குடித்தொகை

| தோட்டங்கள் | எருமை மாடுகளின் எண்ணிக்கை | செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பளுகஸ்வெவ | 300 | |
| சிலாபம் | 37 | |
| மாதம்பே | 40 | 168 |
| பிங்கிரிய | | 438 |
| **மொத்தம்** | **377** | **606** |



எருமை மாடு மற்றும் செம்மறியாடுகில் இருந்து பெறப்படும் சாணம் ஒரு அசேதன பொருளாக இருப்பதுடன் இடை பயிர் செய்கைக்கு புறம்பாக இளம் தெங்கு பெருந்தோட்டங்களில் மண்ணின் தரத்தை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றது.





## சுற்றாடல்சார் பாதிப்புகள்

### மழைவீழ்ச்சி மற்றும் வளிமண்டல வெப்பம்

மழைவீழ்ச்சி மற்றும் உச்ச காற்று வெப்பநிலை ஆகியன இரண்டு காலநிலை மாறிகளாக காணப்படுவதுடன் இவை தெங்கு வட்டத்தில் பழங்கள் மீது பாரிய தாக்கத்தைக் கொண்டுள்ளன. மண்ணின் நீர் பற்றாக்குறையை கவனத்திற் கொள்ளாது காற்றின் வெப்பநிலை அதிகரித்தல் பூகோள வெப்ப காரணியினால் தவிர்க்க முடியாத ஒரு விடயமாக உள்ளது.

எமது பயிர் செய்கைகள் முழுமையாக மழை நீரிலேயே தங்கியுள்ளன. அத்தோடு உலர் வலய மற்றும் இடைநிலை உலர் வலயங்களில் குறைந்த மழை வீழ்ச்சி பெறுகின்ற காரணத்தினால் கோடை நிலைமையினால் வருடாந்தம் பாதிப்புக்கு உள்ளாகின்றது. இவ்வாறான பிரதேசங்களிலேயே எமது அனேகமான பெருந்தோட்டங்கள் அமைந்துள்ளன.

நீர் பற்றாக்குறையாக உள்ள காலத்தில் மட்டுப்படுத்தப்பட்ட ஒளித்தொகுப்பின் விளைவொன்றாக, இலைகளின் வளர்ச்சி மற்றும் மீள் உற்பத்தி வளர்ச்சி கனிசமான அளவு பாதிக்கப்படுவதுடன் இது குறைவான அல்லது உற்பத்தியின்மைக்கு காரணியாக அமைகின்றது.

ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மழைவீழ்ச்சி மற்றும் ஈரப்பதனான நாட்கள் 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளன.






### மழை நீர் அறுவடை





ஆண்டு பூராக நிலையான காய் உற்பத்தியைப் பராமரிப்பதற்கு ஒழுங்கு முறையாக நீர் விநியோகம் தென்னை மரங்களுக்குத் தேவையாகும். தென்னை மரங்கள் ஆணி வேர் முறையின்றி நாருரு வேர் முறையை கொண்டிருக்கின்றன. இவை மிக அதிக அளவான வேர்களை கொண்டுள்ளதோடு இவை 2 மீட்டர் சுற்று சுற்று வட்டத்திற்குள் மற்றும் உயர் மட்டத்தில் உள்ள நிலத்தில் உயர் நீர் ஈர்ப்புத்தன்மையிலேயே கவனம் செலுத்துகின்றன. காணப்படுகின்றது. எனவே, மழை வீழ்ச்சி இல்லாத காலத்தில், தென்னை நிலங்களில் மண்ணின் ஈரத்தன்மையை பேணிக் கொள்வதற்கு உயர் முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

நீர் தடாகங்ககளை தூரெடுப்பதன் பிரதான குறிக்கோளாவன நீரை சேமித்து வைப்பதோடு முடிந்நளவு மழைநீர் மற்றும் நில ஈரத்தன்மையை பாதுகாப்பதாகும்.

இடர் முகாமைத்துவத்தில் உள்ள மிக முக்கிய இடம்பெற்றுள்ள இடரான மழை நீர் சேகரிப்பே மண்ணின் ஈரப்பதனை அதிகரிக்கக் கூடிய கூறாக உள்ளது. 2017 ஆம் ஆண்டுக்கான மழை வீழ்ச்சியும் ஈரமான நாட்களும் தொடர்பான விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

## புத்தாக்கங்கள்

### மரபணு ரீதியாக மேம்படுத்தப்பட்ட தென்னை நாற்றுக்களின் உற்பத்தி மற்றும் கரமகரந்த சேர்க்கை

தென்னை மரங்கள் குறுக்கு மகரந்த சேர்க்கை மூலம் உருவாகும் தாவரமாகும். அதிக விளைச்சலை கொண்ட “ஆரோக்கியமான தாய் மரத்திலிருந்து” பெற்றுக்கொள்ளப்பட்ட தேங்காய் விதைகளை கொண்டு இம்மகரந்த சேர்க்கை செய்யப்பட்டிருந்தாலும் தாய் மரத்துக்கு ஒப்பான பண்புகளையோ வினைதிறனையோ முழுமையாக இவ்விதைக்காய்கள் கொண்டிருப்பதில்லை. ஏனெனில் இதற்காக குறைந்த வினைத்திறன் கொண்ட அயல் தென்னந் தாவரங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மகரந்தங்களாக இருக்கும்.

எனவே, CRI விஞ்ஞானிகளின் விஞ்ஞான ரீதியான உதவியுடன், சிலா/பெருந்தோட்ட நிறுவனம் இணைந்து விசேடமாக தெரிவு செய்யபட்ட தாய்மரங்களை கொண்டு கர மகரந்த நிகழ்ச்சித் திட்டம் பளுகஸ்வெவ தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொலுத்தீன் பைகளால் மூடப்பட்ட ஆண்மை மகரந்தங்களை கொண்ட பூக்களை “சன் ராமன்” மகரந்தங்களுடன் உராய்வு செய்து உயர் விளைச்சல், கோடைக்கு தாக்கு பிடிக்க கூடிய தன்மை, உயர் தர கொப்பரா மற்றும் எண்ணெய்யை பெற்றுத் தரக் கூடிய பண்புகளை உடைய உயர்தர சன்ராமன் விதைத் தேங்காய்களை உற்பத்தி செய்தல்

### தனித்துவமான “கப்ருவன” விதை தோட்டம்.

தேங்காய் விதைகளின் உருவாக்கத்திற்கு “கப்ருவன” கலப்பு விதையை உற்பத்தி செய்வகற்கு ஒரு தனிமைப்படுத்தப்பட்ட விதைத் தோட்டம் / விதை உருவாக்கம் 2012 இல் CRI – CPL கூட்டு செயற்திட்டம் கினியம தோட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.





## பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள்

### பதப்படுத்தப்பட்ட மரமுந்திரிகை

மொத்தமாக 827.63 ஹெக்டேயர் நிலப்பரப்பில் மரமுந்திரிகை நடப்பட்டுள்ளதுடன் இவை பெரும்பாரும் இலங்கையில் புத்தளம் மாவட்டத்தை அண்டிய பிரதேசங்களில் பிரதானமாக புத்தளம் மற்றும் மங்கள எலிய பிரதேச தோட்டங்களில் வியாபித்துள்ளன.

2017 ஆம் ஆண்டின் மொத்த மரமுந்திரிகை அறுவடை 34,289 கிலோவாகும். அத்தோடு பச்சை விதைகள் சந்தையில் சிறந்த விலையை பெறுகின்றன. மரமுந்திரிகை உற்பத்தியில் ஒரு பகுதி பளுகஸ்வெவ தோட்டத்தில் பதப்படுத்தப்படுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு விற்பனையும் செய்யப்படுகன்றது.

### தேங்காய் எண்ணெய்

2012 ஆம் ஆண்டின் போது பளுகஸ்வெவவில் உற்பத்தி செய்யப்பட்ட கொப்பராவை பயன்படுத்தி தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் உற்பத்தயில் நாங்கள் ஆரம்பித்தோம். தரமற்ற, வெளுக்கிய, மணம் நீக்கப்பட்ட, RBM செயன்முறைப்படுத்தப்பட்ட “தேங்காய் எண்ணெய்”, என அழைக்கப்படும் மற்றும் கலப்படம் செய்யப்பட்ட மலிவான விலையில் சந்தையில் காணப்படும் தாவர எண்ணெய்க்கும் பதிலாக இயற்கையானதும், சிறந்த தரமானதும் நுகர்வோரால் ஏற்றுக்கொள்ளக் கூடிய விலையிலுமான துாய தேங்காய் எண்ணெய்யை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதே எமது இலக்காகும்.








### திறைசேரிக்கு உயர் மட்ட பங்கிலாபங்கள்

வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் சிறந்த பிராந்திய பெருந்தோட்டங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதி கூடிய பங்கிலாபங்களை திறைசேரிக்கு பிரகடனப்படுத்தியுள்ளதுடன், காணி குத்தகை கொடுப்பனவாக மேலும் ரூபா. 411 மில்லியன்களுடன், விருதுகள் மற்றும் ஊக்கக் கொடுப்பனவுகளுடன் பதவியணிக்கு (EPF/ ETF/ பனிக்கொடை உள்ளடங்களாக) அனைத்து நியதிச் சட்டக் கொடுப்பனவுகளை வழங்கிய பின்னர் பங்கிலாபமாக (1992 முதல் 2016 வரை) ரூபா. 457 மில்லியன்களை திறைசேரிக்கு செலுத்தியுள்ளது.



## எமது CSR நிகழ்வுகள



வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் 25 ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டம்



வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் 25 ஆண்டு நிறைவு விழாவுக்கு இணங்க புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு தும்புக் கயிறு ஆலையை திறந்தமை



தலைவர் / பி.நி.அ மாஸ் கோ அதி உயர் விருதினை பெற்றுக் கொண்டமை



சிலாபம் ஹோட்டல் விடுதியில் பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் தொடர்பான கருத்தரங்கு



வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் 25 ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டத்தின் போது நிகழ்ந்த தென்னங்கன்று நாட்டும் விழா



வெள்ளம் மற்றும் மண் சரிவுகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட வெள்ள நன்கொடை நிகழ்ச்சிதிட்டம்



கொழும்பு கொள்வனவு விழாவில் வரை. சிலா. பெருந்தோட்ட நிறுவனத்தின் உற்பத்தி பொருள் விற்பனை நிலையம்



இலங்கை சதொஸ மற்றும் பொது மக்களுக்கு சலுகை விலையில் தேங்காய்களை விநியோகித்தல்

## நிலைபெறுதகுதன்மை

### நிலைபெறுதகுதன்மை மீளாய்வு

உயிரியல் வளங்களை உயிரோட்டமாக வைத்துக் கொள்வதற்கு முகாமையாக நிலைபெறுதகு தன்மை அறிமுகம் செய்யப்படும். சுற்றாடல் பாதுகாப்பு, சமூக பொறுப்பு மற்றும் பொருளாதார கொள்கைகள் அதன் பிரதான குறிக்கோள்களாகும். நிறுவனத்தின் பௌதீக, பொருளாதார மற்றும் சமூக நிலைபெறுதன்மையானது மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை பட்டவகையிலும் கூட்டாகவும் கட்டுப்படுத்துவதன் மூலம் அபிவிருத்தி அடைகின்றது. சுற்றாடல் சமநிலைதன்மை, சுற்றாடல் முறைமைப் பாதுகாப்பு தொடர்பாக உயர் முன்னுரிமை வழங்கப்படுகின்றன. வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் விவசாய சுற்றாடலின் அடிப்படையிலேயே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையேயான சமூக பொறுப்புக்களின் அடிப்படையில் தோட்டங்களுக்கு அருகில் வாழ்கின்ற பல்வேறுபட்ட வகுதியினர்களுக்கு அபிவிருத்தி செய்யப்பட்ட சுற்றாடல் முறைமைகளின் பொருளாதார நன்மைகளை வழங்குவதற்கு எமக்கு இயலுமை கிடைத்திருக்கின்றது.

### நிலைபெறுதகு விவசாயம்

வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் 5,733.23 ஹெக்டேயர்கள் முகாமை செய்யப்படுகின்றதோடு பிரதான பயிர் செய்கையாக தெங்கு பயிர்ச்செய்கை விளங்குகின்றது. உயிரியல் பல்வகைமையின் ஊடாக காணியினை உச்ச அளவு பயன்படுத்துவதற்கு இயலுமை எமக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. தென்னை பயிர்ச்செய்கையின் கீழ், இடைப்பயிர்ச்செய்கை, கீழ் பயிரிடல், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றை தாபிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளன.

2008 ஆம் ஆண்டில் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் அரசமயமாக்கப்பட்ட போது, தென்னை விளைச்சல் தரும் பயிர்களின் சதவீதம் 6% ஆக இருந்தாலும் தற்போது (2017 ஆகும் போது) இது 25% மாக அதிகரித்துள்ளது. அடுத்து வரும் 8 ஆண்டுகளுக்குள், கீழ் நடுகை செய்யப்பட்ட தாவரங்கள் விளைச்சல் தர ஆரம்பிக்கும் போது விளைச்சல்களில் 30% அதிகரிப்பு நிச்சயமாக காணப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. பெருந்தோட்டங்களின் கீழ் குறிப்பிட்ட தாபிப்பின் பின்னர் 1 ஹெக்டேயருக்கு 138 என்ற நிலையை பெருந்தோட்ங்கள் அடைந்துள்ளது.

மென்மேலும் கீழ் மற்றும் புதிய பெருந்தோட்டங்களை ஸ்தாபிப்பதற்காக பொருத்தமான காணிகளை இணங்காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இது ஒரு அடைவாகவும் இருப்பதனால் நாம் இவ்வாறான அபிவிருத்திகளில் முதலீடு செய்யும் நிலையில் நாம் இப்போது இருக்கின்றோம்.

மோசமான காலநிலைமைகள் மற்றும் நைதரசன் மண்ணுக்குச் சேர்க்கும் தாவரங்களை நடல் காரணமாக கால்நடை இனப்பெருக்கத்தை விரிவுபடுத்தல், விதை அழிவுகளை மீள் நடல் ஊடாக உயிரியல் குடித்தொகையை அதிகரிப்பதன் ஊடாக விஷேட சுற்றாடலொன்றை தாபிப்பதன் ஊடாக அலகுக் கிரயத்தை குறைப்பதற்கான இயலுமை எமக்கு கிடைத்துள்ளது.

### மண் உயிரியல் செயற்பாட்டை அபிவிருத்தி செய்தல்

அசேதன வளமாக்கிகளுக்குப் பதிலாக சேதன வளமாக்கிகளை அறிமுகம் செய்தமையின் காரணமாகவும், மண்ணின் காற்றோட்டத்தை அதிகரித்தல், மண்ணின் தன்மை, மாடு மற்றும் செம்மறி சாணங்களை நாற்றுகளுக்கு பயன்படுத்துவதன் மூலம் நுண்ணுயிர் செயற்பாடு, நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நீரூற்றுக்களில் நீர் ஒதுக்கீடு, மூடு பயிர் வளர்ப்பு மூலம் மண்ணின் சேதன உயிரியல் வெகுஜனங்களை நிறுவுதல் மற்றும் கிளிசீரியா போன்ற நைதரசன் தரக்கூடிய தாவரங்களை பயிரிட்டமை என்பவற்றின் மூலம் காணி வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டமை மற்றும் நிலைபெறுதன்மையை உறுதிப்படுத்தப்படுகின்றது.

அரசாங்க கொள்கைகளை பின்பற்றுவதன் ஊடாக, உயிரியல் தரக்குறைவை ஏற்படுத்தும் வலுவான உலோகங்களுடன் விவசாய இரசாயணங்களின் பயன்பாடு அண்மைய கடந்த காலத்தில் குறைத்துக் கொள்வதற்கு எமக்கு இயலுமை கிடைத்தது. விஷேடமாக ஆபத்தான களை நாசின மற்றும் இரசாயணங்களின் பயன்பாடு குறைக்கப்பட்டுள்ளது. சுற்றாடல் சமநிலையை பாதிக்கின்ற இரசாயன முறைக்குப் பதிலாக பின்வரும் முறைகள் ஏற்ளுக் கொள்ளப்பட்டுள்ளன. அத்தோடு நவீன முறை பின்பற்றப்பட்டுள்ளது.

1. களைநாசினிகளை பயன்படுத்துவதற்குப் பதிலாக, இயந்திர முறையில் களை எடுத்தல், உழுதல் பியூரேரியா போன்ற மூடுபடை தாவரங்களை தாபித்தல் மற்றும் எருமை மாடுகள் மற்றும் செம்மறியாடுகளை வயல்களில் கட்டுப்படுத்தல் ஊடாக களைகளை கட்டுப்படுத்தல்
2. தென்னை பயிர்செய்கையை தாக்குகின்ற சிவப்பு வீவல் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு, வயல்களில் பெரமோன் பொறகளின் பிரயோகம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
3. உயிரியல் விஞ்ஞான முறைகளின் ஊடாக வயல்களை சுத்தமாக வைத்துக் கொள்ளுதல்
4. தென்னையில் மைட்டாவை கட்டுப்படுத்தும் முகமாக, கடுமையான சேதங்கள் இணங்காணப்பட்டுள்ள பிரதேசங்களில் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபாரிசின் பெயரில் மைட்டாவை கட்டுப்படுத்தும் நுண்ணங்கிகளை வெளிவிடுதல்.

### வளமாக்கிகளாக மற்றும் மீள் சுழற்சியாக சேதனப் பொருட்களை பயன்படுத்துதல்

தென்னங் கன்றுகளுக்குத் தேவையான சக்திக் குறைபாடுகள் தொடர்பாக முழுமையாக அசேதன பசளைகளை பயன்படுத்துவதற்குப் பதிலாக தற்பொழுது சேதன பசளைகளுடன் அசேதன வளமாக்கிகளையும் சேர்த்து வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் பயன்படுத்துகின்றது. அவ்வாறு செய்வதன் மூலம், மண்ணின் உயிர் பொருட்தன்மையை பாதுகாத்துக் கொள்ள முடிந்தது. பளுகஸ்வெவ தோட்டத்திலுள்ள எருமை மாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாட்டுச் சாணியின் பிரயோகம் சேதன வளமாக்கியாக அதே தோட்டத்தில் உள்ள நாற்றுக்களுக்கு பிரயோகிக்கப்பட்டதுடன், மாவத்தகம தோட்டத்திலுள்ள எருமை மாடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாட்டுச் சாணி மாவத்தகம தோட்டத்திலுள்ள நாற்றுக்களுக்கு சேதன பசளைகளாகவும் மற்றும் கினியம, ஆண்டிகெதர மற்றும் ஹீன்மெலியாகார ஆகிய இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட செம்மறியாட்டு சாணம் அதே தோட்டத்திலுள்ள நாற்றுக்களுக்கு அசேதன பசளைகளாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

அசேதன பசளைகளுடன் சேதன பசளைகளையும் சேர்த்த பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் தன்மை மேம்படுவதனால் மண்ணின் ஈரத்தன்மை பேணப்படுவதுடன் மண்ணின் அடிப்பகுதிக்கு மண்ணின் ஊட்டச்சத்துக்கள் ஊடுறுவிச் செல்லல் கட்டுப்படுத்தப்படுகின்றது. விசேடமாக தென்னை மரங்கள் தொடர்ச்சியான வளர்ச்சியையும் உற்பத்தியையும் காட்டுவதுடன் இதற்காக பாரியளவு ஊட்டச்சத்துக்கள் உறிஞ்சப்படுகின்றது. எனவே அத்தகைய ஊட்டச்சத்துக்கள் மரங்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு உறிஞ்சப்பட்ட ஊட்டச்சத்துக்களை தென்னை ஓலைகள், மட்டைகள், தும்புகள் என்பவற்றை

தோட்டங்களிலேயே புதைப்பதன் மூலமாக சூழலுக்கு உகந்த வகையில் மீளப்பெற்றுக்கொள்வதற்காக 2017 ஆம் ஆண்டில் அவ்வாறு செய்யப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு:

| தோட்டம் | தென்னை மட்டை புதைத்தல் (கன்றுகள்) | தென்னந் தும்பு சுற்றிவர இடல் (கன்றுகள்) | தும்புகளை புதைத்தல் (குழிகள்) |
|---|---|---|---|
| சிலாபம் | 76,011 | 6,433 | 2,691 |
| பிங்கிரிய | 99,069 | 8,957 | - |
| திவுலபிட்டிய | 73,176 | 6,344 | 2,000 |
| மாதம்பை | 70,440 | 2,645 | 1,600 |
| பழுகஸ்வெவ | 83,568 | 4,745 | 4,246 |
| தம்பபன்னி | 77,063 | 3,800 | 3,000 |
| **மொத்தம்** | **479,327** | **32,924** | **13,537** |

### உயிரியல் முறைமையை பாதுகாத்தல்

மாவத்தகமையில் 50 ஏக்கர் மற்றும் கல்கந்த தோட்டத்தில் 10 ஏக்கர்கள் போன்ற உயிரியல் வளங்களாக அங்கு சிரிய வன ஒதுக்குகள் காணப்படுகின்றன. இவ்வன ஒதுக்குகள் ஈரவலய சுற்றாடல் அமைப்பை காட்டுவதுடன் அவற்றை நீண்ட காலமாக உயிரியல் பல்வகைமைப்படுத்தலுக்காக பாதுகாக்கப்பட்டு வருவதுடன் இது நிலையான காணி முகாமைத்துவத்தை காட்டுகின்றது.

### மர நடுகை முகாமை

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் 85 தோட்டங்களை உள்ளடக்குவதுடன் அங்கு சுமார் 21,533 மரங்கள் காணப்படுகின்றன. சில தோட்டங்களில் வேலி எல்லைகளாக அனேகமான மரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான மரங்கள் காணியினுள் பரந்துள்ளதுடன் அது சிறிய வனமாகவும் உருவெடுத்துள்ளது. இவ்வாறான பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டு வனப்பிரதேசமாக முகாமை செய்யப்பட்டுள்ளது. காசமடு மற்றும் தம்பன்னி தோட்டங்களில் 12 ஏக்கர்களில் தேக்கு மரங்களுக்கு மேலதிகமாக அவ்வாறான மரங்கள் தேவையான வளர்ச்சி மட்டத்தை அடைந்த பின்னர் வெட்டி அகற்றப்படுகின்றது. எதிர் வரும் காலங்களில் ஐந்து வருட வன முகாமைத் திட்டமொன்றை தயார் செய்வதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம்

### நிலைபெறுதகு உற்பத்தி

வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் தற்பொழுது பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை சந்தைப்படுத்துவது தொடர்பாக அதிக கவனம் செலுத்தி வருகின்றது. பளுகஸ்வெவ தோட்டத்தில் சிறந்த கொப்பராவிலிருந்து தூய்மையான தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகின்றதோடு தம்பபன்னியில் பதனிடப்பட்ட மரமுந்திரிகை உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, இவற்றை செயல்படுத்துவதன் ஊடாக, வாடிக்கையாளர்கள் உயர் தர உற்பத்திகளை நுகர்வதற்கு வாய்பொன்னை வழங்குவகற்கு எமக்கு இயலுமை கிடைத்துள்ளது. மேலும், எமது உற்பத்திகளை எமது கொழும்பு விற்பனை நிலையங்கள் மூலமாக நலன்புரி சங்கங்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. வாடிக்கையாளர்களுக்கு உயர்தர உற்பத்திகளை விநியோகிப்பதே எமது குறிக்கோளாகும்.

### காபன் பாத அச்சு

வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உற்பத்தியாக்கப்படும் காபன் டயொக்சைட் மற்றும் அதே அளவு ஆபத்தான வாயுக்களை குறைப்பதன் குறிக்கோளோடு பணியாற்றி வருகின்றது. உயர் வினைத்திறனான கருவிகளை பயன்படுத்துவதயன் மூலமும், வேலைகளுக்கு உற்பத்திப் பலனளிக்காத வாகனங்களின் பயன்பாட்டை தடுத்தல், மீள் சுழற்சிக்காக தரக் குறைவான காபன் பொருட்களை அனுமதித்தல் மற்றும் ஊழியர்களின் மனோபாவம் மற்றும் உற்பத்தி திறனின் அபிவிருத்தியின் ஊடாக காபன் பாத அச்சின் வீழ்ச்சிக்கு நாங்கள் பங்களிப்பு செய்துள்ளோம்.

## ஊழியர் மற்றும் சமூக தொடர்பு

### ஊழியர் நலன்கள்

ஊழியர்களின் மனோபாவம் மற்றும் அவர்களுடைய நன்மைகளை மேம்படுத்துகின்ற நிறுவனமொன்றாக வரையறுக்க சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் காணப்படுகின்றது. நிறுவனமொன்றின் மிக முக்கியமான வளமாக மனித வளங்கள் இனங்காணப்பட்டு அவர்களது செயலாற்றுகை மதிப்பீட்டின் ஊடாக நிறுவனத்தின் வருடாந்தம் அதிய நலன்புரி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறு நிறுவனத்தினால் ஊழியர்களுக்கு உரித்தான சில நன்மைகள் பின்வருமாறு:

- ஊக்கப் பணமாக 2017 ஆம் ஆண்டில் ரூபா. 15.10 மில்லியன்கள் கொடுப்பனவு.
- 10% ஊழியர் பங்கிலாபமாக ரூபா. 11.10 மில்லியன்கள் வழங்கியமை.
- குறைந்த தொகையொன்றில் மாதாந்த நுகர்வு தொடர்பாக தேங்காய்களை விநியோகித்தல்.
- சகல ஊழியர்களும் காப்புறுதி திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.
- குறைந்த அளவான வட்டி வீதத்தின் கீழ் இடர் கடன்.
- பதவியணி மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல்.
- வருடாந்த சுற்றுப்பயணத்திற்கான பங்களிப்பு.

இது மனித வள ஊக்கப்படுத்தலுக்கான ஒத்துழைப்பாக இருப்பதுடன் இது நிறுவனத்தின் உற்பத்தித் திறணை அதிகரிப்பதற்கு உதவி புரியும்.

### தோட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி

பொருத்தமான சூழலில் வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதுடன் இங்கு ஊழியர்கள் சிறந்த ஆரோக்கியமான நிலைமைகளின் கீழ் ஊழியர்கள் பணியாற்ற முடியும். விசேடமாக தோட்டப் பணியாளர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

| விபரம் | மொத்தம் (ருபா. மில்) |
|---|---|
| 1. தோட்ட விடுதிகளை பராமரித்தலும் திருத்தம் செய்தலும். | 7.80 |
| 2. வீதிகளை சீரமைத்தல் | 0.88 |
| 3. நீர் விநியோகச் செயற்பாடுகள் | 2.54 |
| 4. ஏனைய நலன்புரிச் செயற்பாடுகள் | 7.50 |

### சமூகப் பொறுப்பு

வரையறுத்த சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் வெளியக பங்காளர்களுடன் இடை தொடர்புகளை அபிவிருத்தி செய்து கொண்டு தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. எமது காணிகளில் கிராமவாசிகளினால் தங்களுடைய கால்நடைகளை நிரந்தரமாக வளர்த்துக்கொள்வதற்கு நிறுவனம் நிலத்தினை பயன்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்வதன் ஊடாக அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் நாங்கள் பங்களிப்புச் செய்கின்றோம். களைகளைக் கட்டுப்படுத்துவதற்கு மாடுகள் உதவி புரிவதுடன் மாடுகளை காணிகளில் பட்டியடிக்கச் செய்வதன் ஊடாக அந்நிலங்களின் காபன் தன்மை அதிகரிக்கப்படுகின்றது.

மேலும், இப் பிரதேசங்களின் சமய நிலையங்களினால் விடப்பட்ட கோரிக்கையின் பிரகாரம், அவர்களது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு பெரஹெர தொடர்பாக இறந்த தென்னை மரங்கள் மற்றும் கொப்பராக்கள் போன்ற பொருட்களை வழங்குவதற்கு முடிந்த அளவில் அவர்களுக்கு உதவி வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாய வியாபார நிறுவனமொன்றாக மற்றும் நாட்டின் அபிவிருத்தியின் பங்காளர் என்ற வகையிலும், ஊழியர்களின் சகல தேவைகளையும் நிறைவு செய்வதன் ஊடாக பொருளாதார ரீதியாக உற்பத்திதிறனான விவசாய செயன்முறைகளில் ஈடுபடுவதன் ஊடாக சுற்றாடல், சமூக மற்றும் பொருளாதார ரீதியாக நிலைபெறுதகு சூழல் சமநிலையை அடைந்து கொள்வது எமது குறிக்கோளாகும்.


Plant the Future...

## நிறுவனத்தின் நிதிச் செயலாற்றுகை தொடர்பான கண்ணோட்டம்

| விடயம் | 2017 ரூபா. மில். | 2016 ரூபா. மில் | வேறுபாடுகள் (2016 - 2017) | | |
|---|---|---|---|---|---|
| | | | ரூபா. மில். | % | பிரதான காரணிகள் |
| வருமானம் | 516 | 383 | 133 | 35 | தேறிய விற்பனை சராசரி அதிகரிப்பு மற்றும் அதிக ஆரம்ப இறுப்பு |
| விற்பனை கிரயம் | 311 | 234 | 77 | 33 | அதிக ஆரம்ப இறுப்பு மற்றும் குறைந்த இறுதி இறுப்பு |
| ஏனைய வருமானம் | 59 | 66 | (7) | (11) | கால்நடை கருத்திட்டத்தின் மூலமான இலாபக் குறைவு |
| நிர்வாக செலவுகள் | 111 | 103 | 8 | 8 | சம்பளம் மற்றும் ஏனைய நிர்வாக செலவுகளின் அதிகரிப்பு |
| ஏனைய நடைமுறை செலவுகள் | 12 | 9 | 3 | 33 | 10% ஊழியர் இலாபப் பங்கு அதிகரிப்பு |
| நிதி வருமானம் | 18 | 14 | 4 | 29 | நிலையான வைப்புக்கள் மீதான முதலீடு மற்றும் வட்டி வீதங்களின் அதிகரிப்பு |
| நிதிச் செலவுகள் | 34 | 33 | 1 | 3 | வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அதிகரிப்பு காரணமாக துநுனுடீ சொத்துக்கள் மீதான குத்தகை வட்டி அதிகரிப்பு |

### வருமானம்

2017ஆம் ஆண்டு மீளாய்வின் போது நிறுவனத்தின் ரூபா. 516 மில். வருமானத்தையும் 2016 ஆம் ஆண்டின் ரூபா. 383 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா. 133 மில். வருமான அதிகரிப்பாகும். (35% அதிகரிப்பாகும்). 2016 ஆம் ஆண்டின் ரூபா. 25.00 இலிருந்து 2017 ஆம் ஆண்டின் ரூபா. 42.00 ஆக (NSA) தேறிய சராசரி விற்பனை பெறுமதி அதிகரிப்பு மற்றும் ஆண்டின் உயர் ஆரம்ப இறுப்புமே இச்சாதகமான வித்தியாசத்திற்கான பிரதான காரணிகளாக காணப்படுகின்றன.

எனினும், தேங்காய்களின் அறுவடையானது 2016 ஆம் ஆண்டின் 16,522,290 இலிருந்து 2017 ஆம் 11,651,155 ஆக 29% விளைச்சல் வீழ்ச்சியை காட்டுகின்றது. இதற்கு 2016 சனவரி முதல் மார்ச் மற்றும் ஜுன் முதல் டிசம்பர் வரை காணப்பட்ட உலர் மற்றும் வெப்பமான காலநிலை 2017 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து காணப்பட்டமையே காரணமாகும்.










### விற்பனைக் கிரயம்

2016 ஆம் ஆண்டின் 234 மில்லியன்களில் இலிருந்து 2017 ஆம் 311 மில்லியன்களாக விற்பனைக்கிரயத்தில் ரூபா. 77 மில்லியன்கள் அதிகரிப்பை காட்டுகின்றது.

| | 2017 | 2016 |
|---|---|---|
| உற்பத்தி கிரயம் ரூபா. மில் | 288 | 268 |
| - ஆரம்ப இருப்பு ரூபா. மில் | 56 | 22 |
| - இறுதி இருப்பு ரூபா. மில் | (33) | (56) |
| விற்பனை கிரயம் ரூபா. மில் | 311 | 234 |

- மீளாய்வு ஆண்டின் போதான உற்பத்திக் கிரயம் ரூபா. 288 மில்லியன்கள் ஆகும். முன்னைய ஆண்டின் ரூபா. 268 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது இது ரூபா. 20 மில்லியன் அதிகரிப்பாகும். தோட்ட தொழிலாளர்களுக்கான CESU/CPS உடன்படிக்கையின் பிரகாரம் சம்பள அதிகரிப்பு மற்றும் தோட்ட நிறைவேற்று தரம் உள்ள, அல்லாத பதவியினருக்கான முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பள அதிகரிப்பு என்பன இதற்கான பிரதான காரணிகளாக காணப்படுகின்றதோடு இதன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா. 7.2 மில். மேலதிக செலவீனத்ததை ஏற்படுத்தியுள்ளது.
- முதிர்வடைந்த பெருந்தோட்டங்களுக்கான வளமாக்கி பிரயோக கிரயம் 2016 ஆம் ஆண்டின் ரூபா. 19.4 மில்லியன்களில் இருந்து 2017 ஆம் ஆண்டில் ரூபா. 35 மில்லியன்கள் வரை அதிகரித்துள்ளது. இருந்த போதும் 2016 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டின் போது நிலவிய சாதகமற்ற காலநிலை காரணமாக 2016 ஆண்டில்

வரையறைக்குட்பட்ட பிரதேசத்தில் மாத்திரம் வளமாக்கி பிரயோகம் முன்னெடுக்கப்பட்டது.

- மேற்படி காரணிகளுக்குப் புறம்பாக, உற்பத்திக் கிரயத்திற்கான உயர் ஆரம்ப இருப்பு மற்றும் குறைவான இறுதி இறுப்பின் சீராப்பத்தின் காரணமாக ரூபா. 234 மில்லியன்களிலிருந்து ரூபா. 311 மில்லியன்களாக விற்பனை கிரயம் அதிகரித்துள்ளது.

### மொத்த இலாபம்

மீளாய்வு ஆண்டுக்கான மொத்த இலபாம் ரூபா. 205.5 மில். ஆக இருந்ததுடன் இது 2016 ஆம் ஆண்டின் ரூபா. 148.7 மில். களுடன் ஒப்பீடு செய்யும் போது 38% அதிகரிப்பாகும்.

மொத்த இலாப வீதமானது 2016 ஆம் ஆண்டின் 39% இலிருந்து 2017 ஆம் ஆண்டு 40% ஆக அதிகரித்துள்ளது.







### ஏனைய செயற்பாட்டு வருமானம்

மரமுந்திரிகை, உமி, மரக்குற்றிகள், நெல், கால்நடைகள், இறந்த / முதிர்ந்த தென்னை மர விற்பனை போன்ற ஏனைய செயற்பாடுகளின் காரணமாக நிறுவனம் 2016ஆம் ஆண்டு 65.9 மில்லியன்களும் 2017 ஆம் ஆண்டு ரூபா. 59.1 மில்லியன்கள் வருமானத்தையும் உழைத்துள்ளது. இது 10% வீழ்ச்சியாகும்.

N.L.D.B சுற்றறிக்கையின் பிரகாரம் எருமை மாடுகளின் பெறுமதி குறைதல் (உயிரியல் இருப்புக்கள்) கால்நடை செயற்திட்டத்தில் ரூபா. 11.5 மில்லியன் நட்டத்தை ஏற்படுத்தியதோடு மர முந்திரிகை செயற்திட்டத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா. 5 மில்லியன்களாக இருப்பதுடன் இது ஏனைய செயற்பாட்டு வருமானத்தின் வீழ்ச்சிக்கு காரணியாக அமைந்தது.

நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இல 20 இல் ஏனைய வருமானங்கள் தொடர்பான விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

### நிர்வாக, ஏனைய செயற்பாட்டுச் செலவீனங்கள்

முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது, முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணி சம்பள அதிகரிப்பு, ஊழியர் நலன்புரி மற்றும் பிரதான அலுவலகத்தின் கட்டட திருத்தங்கள் காரணமாக நிர்வாக செலவீனங்கள் ரூபா. 102.5 மில். களிலிருந்து 2017 இல் ரூபா. 110.6 மில். ஆக அதிகரித்துள்ளது.

2017 ஆம் ஆண்டுக்கான ஏனைய நிர்வாக செலவீனங்கள், ரூபா. 12.3 மில்லியன்களாக இருப்பதுடன், இரு 2016 ஆம் ஆண்டில் ரூபா. 8.6 மில்லியன்களாக இருந்ததுடன் ஊழியர் இலாப பங்கு 10% இனால் அதிகரித்தமையின் காரணமாக ரூபா. 3.6 மில்லியன் அதிகரிப்பொன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### நிதி வருமானம்

நிதி வருமானம் குறுங்கால வைப்புக்களின் மூலமான வட்டியை உள்ளடக்குவதுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பீடு செய்யும் போது 2017 ஆம் ஆண்டில் ரூபா. 4 மில்லியன்களால் அதிகரித்துள்ளது. இது பிரதானமாக குறுங்கால வைப்புக்கள் மற்றும் வட்டி வீதத்தின் அதிகரிப்பாலாகும். நிதி வருமானம் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 18.4 மில்லியன்களாவதோடு 2016 ஆம் ஆண்டில் ரூபா. 14 மில்லியன்கள் ஆகும்.

### நிதிக் கிரயம்

அரசாங்க குத்தகை மீதான நிதிக் கிரயம் 2017 ஆம் ஆண்டில் ரூபா. 34 மில்லியன்களாக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இது 3% அதிகரிப்பொன்றாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் வருடாந்தம் அதிகரிக்கின்றது.




### வருமானம் மற்றும் நிறுத்தி வைத்த வரி

2017 ஆம் ஆண்டுக்கான நிறுவனத்தின் வரிக்கட்டணம் ரூபா. 44.9 மில். ஆக இருப்பதுடன் 2016 ஆம் ஆண்டின் ரூபா. 15.1 மில்லியன் வரியுடன் ஒப்பீடு செய்யும் போது இது 197% அதிகரிப்பொன்றாகும். இதில் 5.4 மீளாய்வு ஆண்டின் வருமான வரிக்கட்டணமாக விதிக்கப்பட்டது

ஆண்டுக்கான நிறுத்தி வைத்த இலாபம் ரூபா. 39.4 மில்லியன்களாக இருப்பதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 210% அரிகரிப்பாகும். வரி வீதத்தின் அதிகரிப்பின் அடிப்படையில் முதிர்ந்த, முதிர்வடையாத தோட்டங்களின் நேர வேறுபாடுகள் அதிகரித்தமை இதற்கான காரணமாகும்.

பெருந்தோட்ட பயிர்களின் அதிகரிப்பின் காரணமாக இது முன்னை ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 210% அதிகரிப்பொன்றாகும்.

நிறுவனம் தொடர்பாக பிரயோகிக்கத்தக்க சலுகைகள் மற்றும் வீதங்கள், நிதிக் கூற்றுக்கான குறிப்பு இல. 23 இல் காட்டப்பட்டுள்ளன.

### வரிக்கு முன் இலாபம்

2017 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தின் வரிக்கு முன் இலாபம் 49% இனால் அதிகரித்து அல்லது ரூபா. 42 மில். களிலிருந்து 126.4 மில்லியன்களாக ரூபா. 84.8 மில்லியன்களால் ஆண்டுக்கான வரிக்கு முன் இலாபம் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்புக்கு 2017 ஆம் ஆண்டின் (ஏலூ) தேறிய சராசரி விற்பனை உயர்வாக காணப்பட்டமை காரணமாகும்.

2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா. 69.6 மில். ஒப்பீடு செய்யும் போது மீளாய்வு வருடத்தில் ரூபா. 81.4 மில்லியன்கள் வரிக்கு பின் இலாபத்தை நிறுவனம் ஈட்டியுள்ளது.




### வட்டி, வரி, பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமதி அழிவுக்கு முன்னரான உழைப்பு (EBITDA)

#### 2017 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் (EBITDA)

ஆனது 2016 ஆம் ஆண்டின் பதிவு செய்யப்பட்ட ரூபா. 143 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது 23% இனால் அதாவது ரூபா. 176 மில்லியன்களாக அதிகரித்துள்ளது.

### பங்கிலாபம்

அரசாங்க நிதியில் அனேகமான அரச நிறுவனங்கள் தங்கியிருக்கின்ற வேலையில், 2008 ஆம் ஆண்டு மே மாதத்தில் இந்நிறுவனம் அரசாங்கத்திற்கு மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் திறைசேரிக்கு / கோலடன் பங்குதாரர்களுக்கு மொத்தமாக ரூபா. 295 மில். களை பங்கிலாபமாக செலுத்தியுள்ளது. 2016 முதல் 2018 வரை நிறுவனத்தினால் உழைக்கப்பட்ட இலாபத்தை ஒப்பீடு செய்யும் போது இது குறிப்பிடத்தகு உயர் பெறுமானமாகும். இருந்த போதும், 1992 முதல் 2017 வலை சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் திறைசேரிக்கு செலுத்தி உள்ள மொத்த பங்கிலாபம் ரூபா. 457 மில்லியன்கள் ஆகும்.

### மனித வளத்தின் சேவை அங்கிகரிப்பு

நிறுவனத்தின் மிக முக்கியமான சொத்தாக மனித வளம் இருக்கின்றது என்பதை மிக வலுவாக புரிந்து கொண்டு, 2016 ஆம் ஆள்டின் ரூபா. 14.5 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது 2017 ஆம் ஆண்டின் ஊழியர்களின் செயலாற்றுகை கொடுப்பனவாக ரூபா. 15.1 மில்லியன்களை ஊழியர்களை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு செலுத்தியுள்ளது.

இதற்கு மேலதிகமாக 1995 ஆம் ஆண்டில் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் கீழ், பெருந்தோட்ட முகாமை கண்காணிப்பு பிரிவின் அங்கிகாரத்துடன் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்டிருந்த திட்டத்திற்கு இணங்க 10 % தொழிலாளர் இலாபப் பங்கு என்ற வகையில் 2017 ஆம் ஆண்டில் தொழிற்பாட்டு இலாபத்திலிருந்து 11.1 மில்லியன் தொகையை செலுத்தியுள்ளது.

### பங்கொன்றுக்கான உழைப்பு (Earning per Share)

நிதியாண்டின் போது, பங்கொன்றுக்கான இலாபமாக ரூபா. 4.07 வை நிறுவனம் உறுவாக்கியுள்ளதுடன், முன்னைய ஆண்டில் பதிவான ரூபா. 3.48 ரூபாவுடன் ஒப்பீடு செய்யும் போது இது 17% அதிகரிப்பாகும்.




### மூலதன உழைப்பின் மீதான திரும்பல் மற்றும் பங்குகளுக்கான உழைப்பு

2016 ஆம் ஆண்டின் 10% இலிருந்து 2017 ஆம் நிதியாண்டில் 13% ஆக மூலதன உழைப்பின் மீதான திரும்பல் அதிகரித்துள்ளது. இது மீளாய்வு வருடத்தில் உயர் இலாபத்திற்கு தாக்கம் செலுத்தியுள்ளது. அதன் பிரகாரம் பங்கொன்றுக்கான சராசரி உழைப்பு அதே காரணத்தினால் தாக்கம் செலுத்தியுள்ளதுடன் இது நடைமுறை நிதி வருடத்தில் 8% இலிருந்து 9% ஆக அதிகரித்துள்ளது.






### சொத்து அடிப்படை

2017ஆம் ஆண்டு நிறைவில் நிறுவனத்தின் சொத்து அடிப்படை நடைமுறையல்லாச் சொத்து 78% மற்றும் நடைமுறைச் சொத்து 22% உடன் ரூபா. 1,356 மில்லியன்களை பதிவு செய்துள்ளது. உயிரியல் சொத்துக்களின் அதிகரிப்பின் காரணமாக பிரதானமாக ஆண்டின் போது மொத்த சொத்துக்கள் 6% இனால் அதிகரித்துள்ளது. உயிரியல் சொத்துக்களாவன முதிர்வடையாத மற்றும் முதிர்வடைந்த தெங்கு பயிர்கள், மரமுந்திரிகை பயிர்கள் ஏனைய பல்லாண்டுப் பயிர்கள் மற்றும் கால்நடைகள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

| சொத்து அடிப்படை | 2017 ரூபா. மில். | 2016 ரூபா. மில். |
|---|---|---|
| JEDB தோட்டத்தின் தரிசு நிலத்தின் குத்தகை உரிமை | 74 | 76 |
| JEDB தோட்டத்தின் குத்தகை ஆதன பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 1 | 1 |
| JEDB உயிரியல் சொத்துக்கள் தோட்டத்தின் பௌதீக ரீதியான சொத்துக்களின் குத்தகை உரிமையாளர் | 24 | 27 |
| உயிரியல் சொத்துக்கள் (தோட்டத்தின் பௌதீக ரீதியான சொத்துக்களின் குத்தகை உரிமையாளர்) | 794 | 727 |
| நுகரக் கூடிய உயிரியல் சொத்துக்கள் | 55 | 42 |
| அறுதி உறுதி ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 106 | 97 |
| பிற நிதிச் சொத்துக்கள் | 8 | 8 |
| நடைமுறை சொத்துக்கள் | 294 | 300 |
| மொத்த சொத்துக்கள் | **1,356** | **1,278** |

நிறுவனத்தின் சொத்துக்கள் அடிப்படை பிரதானமாக உயிரியல் சொத்துக்களை உள்ளடக்குவதுடன் இது மொத்த சொத்துக்களில் 60% ஆகும். தளபாட, மரங்கள் நுகர்வு உயிரியல் சொத்துக்களால் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் இது மொத்த சொத்துக்களில் 4% ஆக உள்ளது.

### மூலதனச் செலவு

மீளாய்வு வருடத்தின் போது, புதிய தென்னங் கன்று நடல் / கீழ் வளரி பயிர்ச் செய்கை மற்றும் ஆதனம் பொறி உபகரணங்கள் தொடர்பாக ரூபா. 115 மில். தொகையை நிறுவனம் செலவு செய்துள்ளது. நிறுவனம் ரூபா. 82 மில்லியன்களை (2016 - ரூபா. 85 மில்) புதிய/கீழ் பயிர்ச்செய்கைகளிலும் முதிர்வடையாத பகுதிகளில் 975 ஹெக்டேயர் பரப்பிலும் அதாவது மொத்த மூலதனச்செலவில் 71% இலும், ரூபா. 2 மில்லியன்களை இடை பயிர்ச்செய்கைகளிலும் மிகுதி ரூபா. 31 மில்லியன்களை ஆதனம், பொறி, இயந்திரங்களிலும் (2016 - ரூபா. 17மில்) செலவு செய்துள்ளது.

### உரிமையாண்மை

உரிமையாண்மையானது கூறப்பட்ட மூலதனம் ரூபா. 200 மில்லியன்களையும் ஒதுக்குகள் ரூபா. 747.8 மில்லியன்களையும் உள்ளடக்கி உள்ளது. ஒதுக்குகளின் பங்களிப்பு கீழ்வருமாறு

| | 2017 | 2016 |
|---|---|---|
| நிறுத்தி வைத்த உழைப்புகள் | 665.5 | 633.8 |
| மர ஒதுக்குகள் | 82.3 | 61.8 |
| **மொத்த ஒதுக்குகள்** | **747.8** | **695.6** |

### பங்காளர் நிதி விகிதம்

பங்காளர் நிதியானது மூலதன அமைப்பில் 6% ஆல் அதிகரித்துள்ளது. 2016 896 மில். இலிருந்து ரூபா. 948 மில். மீளாய்வு ஆண்டில் மொத்த சொத்துக்களில் 70% கு சமமாக பங்காளர் நிதி விகிதம் காணப்படுகின்றது.




### திரவத்தன்மை நிலை

| | 2017 | 2016 |
|---|---|---|
| மொத்த நடைமுறை சொத்து | 294 | 300 |
| மொத்த நடைமுறை பொறுப்பு | 121 | 135 |
| தேறிய தொழிற்படு மூலதனம் | 173 | 165 |
| நடைமுறை விகிதம் | 2.4 | 2.2 |

நிறுவனத்தின் தேறிய தொழிற்படு மூலதனம் 31 டிசம்பர் 2016 ஆம் ஆண்டின் ரூபா. 165 மில்லியன்களில் இருந்து 31 டிசம்பர் 2017 இல் 173 மில்லியன்களாப அதிகரித்துள்ளது. இதற்கு குறுங்கால முதலீடுகளின் அதிகரிப்பும் வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகளின் குறைவுமே காரணமாகும்.

### நடைமுறை விகிதம்

மீளாய்வு ஆண்டின் போது நடைமுறை விகிதம் 2.4 தடவைகளாக அதிகரித்துள்ளமையினால் நடைமுளை விகிதம் அதிகரித்துச் செல்லும் போக்கை கொண்டுள்ளது. இது முன்னைய ஆண்டில் 2.2 தடவைகளாகவும் இது பிரதானமாக குறுங்கால முதலீடுகளின் அதிகரிப்பு மற்றும் வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகளின் குறைவின் காரணத்தினால் ஆகும். ஆண்டுக்கான 2.4 நடைமுறை சதவீதம் அர்த்தபூர்வமான மட்டமாக இருப்பதுடன் அதன் ஊடாக நிறுவனத்தின் குறுங்கால திரவத்தன்மையை நிறைவு செய்து கொள்ள முடியும்.

**காசுப் பாய்ச்சல்**

முன்னை ஆண்டின் ரூபா. 76 மில்லியன்களுடன் ஒப்பீடு செய்யும் போது நடைமுறையாண்டில் 136% குறிப்பிடத்தகு அளவில் ரூபா. 180 மில்லியன்களினால் தொழிற்பாட்டு செயற்பாட்டுகளிலிருந்து உருவாக்கப்பட்ட நிகர காசு ரூபா. 180 மில்லியன்களாக உள்ளது. மீளாய்வு ஆண்டின் போது, முதிர்வடையாத பெருந்தோட்டப் பயிர்களில் நிறுவனம் ரூபா. 84 மில்லியன் தொகையை முதலீடு செய்துள்ளது.

முன்னைய ஆண்டின் ரூபா. 80 மில்லியன் நிகர காசு வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பீடு செய்யும போது முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாயச்சல் நடைமுறை வருடத்தில் ரூபா. 137 மில்லியன்கள் நிகர காசு வெளிப்பாய்ச்சல் அறிக்கையிடப்பட்டுள்ளது.

நிதிச்செயற்பாடுகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல்கள், முன்னைய வருடத்தின் ரூபா. 2 மில்லியன் நிகர காசு வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா. 32 மில்லியன் தொகை திறைசேரிக்கு செலுத்தப்பட்ட பங்கிலாபம் நிதிச் செயற்பாடுகளின் நிகர காசு வெளிப்பாய்ச்சலில் அதிகரிப்பில் பிரதான காரணியாக உள்ளது.

அதன் பெறுபேறாக, குறிப்பிட்ட காலத்தின் போதான காசு மற்றும் காசுக்கு சமமான விடயங்கள் மீதான நிகர தாக்கம் நடைமுறையாண்டின் போது ரூபா. 12 மில்லியன் காசு உட்பாய்ச்சலாக இருப்பதுடன் இது முன்னைய வருடத்தில் ரூபா. 6 மில்லியன்களாக உள்ளது.




**2017 ஆம் ஆண்டில் தோட்ட தாணிய பயிர்களின் பங்களிப்பு**

| தோட்டம் | தாணிய விதை |
|---|---|
| சிலாபம் | 1,448,428 |
| பளுகஸ்வெவ | 3,943,764 |
| தம்பபன்னி | 1,747,153 |
| பிங்கிரிய | 1,956,301 |
| திவுலபிட்டிய | 1,207,989 |
| மாதம்பே | 1,347,520 |
| **மொத்தம்** | **11,651,155** |

சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது, நேர்மை, நிறுவன ரீதியான நடுநிலைப் போக்கு, வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுகின்றது. இது நிறுவனத்தின் ஆர்வம் கொண்டுள்ளவர்களுடன் சிறப்பான தொடர்புகளை கட்டியெழுப்புவதற்குப் பெரும் பங்களிப்புச் செய்தது.

நிறுவனத்தின் நடவடிக்கைகள் நெறிமுறை தரங்களுடனும், பங்குதாரர்களின் சிறந்த நலனுடனும் நடாத்தப்படுகின்றன. நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் ஸ்தீரத்தன்மை என்பனவும் வர்த்தகப் பெறுமதி அதிகரிக்கும் முறையில் உருவாக்கப்பட்ட கொள்கைகள், செயலொழுங்குகள், நடைமுறைகள், சரியான கட்டமைப்புக்கள் மற்றும் தகவல்கள் என்பன மேற்படி தொடர்புகளை உறுதிப்படுத்துவதில் சிறந்த பங்களிப்பை பங்களிப்புச் செலுத்தின.

### பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்

நிறுவனத்தின் பணிப்பாளர் சபை நிறுவனத்தின் செயலாற்றுகைக்குப் பொறுப்பாகவுள்ளதுடன் இறுதியில் அது தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கும் கடமைப்பட்டுள்ளன.

### பொறுப்பு

நிறுவனத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் உபாய முறைக் குறிக்கோள்களை உருவாக்குவதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவகற்கும் பணிப்பாளர் சபை கடமைப்பட்டுள்ளது. நிறுவனத்தின் நிதித் தகவல்களின் நம்பகத்தன்மை மற்றும் உள்ளக நிர்வாக முறையின் வெற்றி என்பவற்றுக்கான இறுதிப் பொறுப்பையும் பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.

### ஆக்க அமைவு

2017 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபையானது தலைவர் மற்றும் நிறைவேற்று பணிப்பாளர் உட்பட 7 பணிப்பாளர்களை கொண்டிருந்தது.

### பணிப்பாளர் சபை கூட்டங்கள்

பணிப்பாளர் சபை கூட்டங்கள் மாதாந்த அடிப்படையிலேயே இடம்பெறுகின்றன. இக்கூட்டத்தில் நிறுவனத்தின் உபாய முறை வழிமுறைகள், வருடாந்த வரவு செலவு திட்ட மீளாய்வு, அனைத்து செயற்பாடுகளினதும் முன்னேற்றம், மூலதனச் செலவுகள் என்பன தொடர்பாக மீளாய்வு செய்யப்படுகின்றன.

ஒவ்வொரு கூட்டங்கள் இடம்பெறுவதற்கு முன்னர் அது தொடர்பான விபரங்கள் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டன.

2017 ஆம் ஆண்டில் 13 தடவைகள் பணிப்பளார் சபை கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

### கணக்காய்வுக்குழு

கணக்காய்வுக் குழுவில் 2 நிறைவேற்று தரமற்ற பணிப்பாளர்கள் உட்பட 3 பணிப்பாளர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

திரு. பீ.பீ.எஸ்.சீ நொனிஸ் அவர்கள் நிறைவேற்று தரமற்ற பணிப்பாளரா இருப்பதுடன் இவர் கணக்காய்வுக் குழுவின் தலைவராக கடைமையாற்றுவதோடு இவ்வருடத்துக்குள் ஐந்து மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளார். இக்குழுவின் மேற்பார்வையாளராக கணக்காய்வாளர் தலைமையக்தின் அலுவல் ஒருவர் பங்கேற்றுள்ளார்.

நிறுவத்தின் தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர், முகாமையாளர், உதவிப் பொது முகாமையாளர் - பெருந்தோட்டம் மற்றும் சிரேஷ்ட கணக்காளர் ஆகியோர் அழைப்பின் பெயரில் இக்கணக்காய்வுக் குழுவில் பங்கேற்கின்றனர்.

### சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்க செயற்படுதல்

சங்கத்தின் நியதிச் சட்ம், சங்கத்தின் யாப்பு மற்றும் அரசாங்கத் தொழில் முயற்சிகள் தொடர்பில் ஏற்புடையதாகும் ஏனைய சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கிய வகையி செயற்படுவதற்கு பணிப்பாளர் சபை இயன்றவரை அனைத்து முயற்சிகளையும் செய்கின்றது.

இலங்கை தரக்கட்டளை நியமங்களின் அடிப்படையிலும் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் தேவைகளுக்கு இணங்கியதாகவும் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்கள் யாவும் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

விஷேடமாக நிறுவனமானது மாறி வருகின்ற சூழலொன்றை கொண்டுள்ளதோடு சூழலில் தளம்பல்கள் மற்றும் வெவ்வேறு மட்டங்களில் அபாயங்கள் கண்டறியப்பட்டுள்ளதோடு காலநிலை மட்டங்கள் மற்றும் சந்தை தளம்பல் நிலைகள் மீதான உயர்ந்த அபாய நிலையை காட்டுகின்றது. எமது அபாயமுகாமைத்துவ செயற்பாடு மூலம் அறிவுடனும் முன்நோக்குடனும் அபாயங்களை தாக்குபிடிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது.

### அபாயக்கட்டுப்பாட்டு உபாயமுறைகள்:

| அபாயக் காரணி | அபாயம் பற்றிய மதிப்பீடு | அபாயக் கட்டுப்பாட்டு உபாய முறைகள் |
|---|---|---|
| காலநிலை மாற்றங்கள் | தெங்கு, மரமுந்திரிகை மற்றும் ஏனைய பெரும்போக பயிர்களின் விளைச்சல்கள் பல மாதங்களாக தொடர்கின்ற எதிர்பாராத மற்றும் நீண்ட வரட்சியின் காரணமாக மோசமான காலநிலை நிலைமைகளினால் எதிர்பாராதவித தளம்பல் நிலைமையை கொண்டுள்ளன. | பாரிய கிடங்குகளில் புதைக்கப்பட்ட சிதைவுகளின் வழியினூடாக அதிகரித்த மண் ஈரலிப்புத் தன்மை பாதுகாப்பு பணியை பொறுப்பேற்றலும் பெருந்தோட்ட மண்ணினுள் மழை நீரை சேகரிப்பதற்கான அதிக வடிகால்களும் அதிக நிழலுக்காக, உயரம் குறைவான கிளிசீரியா போன்ற மரங்களை நடுதலும் காப்பு பயிர்களான பூரேரியா போன்ற மரங்களும் நடப்பட்டு வருகின்றன.<br><br>மழை நீரை சேமிப்பதற்காக அதிக தேக்கங்களை புனரமைக்கப்படுகின்றன. அத்தகைய சேகரித்த நீர் தேக்கங்களின் அருகிலுள்ள மண்ணின் ஈரத்தன்மையை பேணுவதனூடாக பனை மரங்களின் வேர்களுக்கு நீரூட்டுதலின் பின்னர் நீர்ப்பாசனத்திற்கு பயன்படுத்தப்பட முடியும்.<br><br>புயிர்கள் எதிர்நோக்கியுள்ள நீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக நீர்ப்பாசனத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. |
| உற்பத்திகளுக்கான சேதம் | 50 வயதுக்கு மேற்பட்ட முதிர்ந்த நிலை தாவரங்களாக மாறி பயனற்ற வயது கூடிய மற்றும் பலனற்றதாக அதிக எண்ணிக்கையான விகிதம் மாறியிருப்பதன் காரணத்தினாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது.<br><br>இதற்கு மேலதிகமாக ஏதாவது கண்ணுக்கு புலப்படாத நோய்களும் பனை மரங்களுக்கும் பெருந்தோட்டங்களுக்குமான இயற்கை காரணங்களுமாகும் | வயது முதிர்ந்த பனை தொகையை பதிலீடு செய்வதற்கு புதிய தோட்டங்கள் மற்றும் தோட்டங்களை பொறுப்பெடுத்தல்<br><br>பலுகஸ்வெவ தோட்டம் மற்றும் திவுலபிடிய தோட்டங்களில் இரண்டு பூச்சிநாசினி ஆய்வுகூடங்களை தாபித்தல்.<br><br>ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உத்திகள் |
| பொருள் சுழற்சி | குறைவான விலைகளும் நிலையற்ற விற்பனைகள், தெங்கு நுகரத்தக்க பொருட்களுக்கான கேள்வில் வீழ்சசியை ஏற்படுத்தி பதிலீடுகள் அதிகரித்தமை, நுகர்வோரின் கேள்வியில் தங்கியிருத்தல் என்பன மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் அதிக எண்ணிக்ககையான தேங்காய்கள் தோட்டங்களில் வெறுமனே வீழ்ந்து கிடக்கின்ற நிலைமையை உருவாக்கும்.<br><br>நுகர்வோர் அதிகம் கவரப்பட்டுள்ளபும் எண்ணெய் போன்ற நெருங்கிய பதிலீடுகளின் போட்டி, குறைந்த விலை என்பனவும் கேள்வி மற்றும் விலைகளில் தாக்கம் செலுத்துகின்றன. | கொழும்பு தெ.அ.அ ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படாத தேங்காய்கள் வாராந்த தெ.அ.அ தேங்காய் ஏல விற்பனைக்கு மேலதிகமாக தலைமை அலுவலகத்திலுள்ள "பொல் பொல" எனபெயரிடப்பட்ட இரு வாரங்களுக்கு ஒரு முறை விற்பனை செய்யும் நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படுகின்றது.<br><br>பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை தயாரிப்பதற்கு கவனம் செலுத்துதல்<br><br>இந்த இரண்டு ஏல விற்பனைகளிலிலும் விற்கப்படாத காய்கள் கொப்பராவாக மாற்றப்படுவதேதாடு அதன் ஒரு பகுதி ஏலவிற்பனை மூலமும் ஏனைய அல்லது பிரதான பகுதி பலுகஸ்வெவ எண்ணெய் ஆலையில் தூய எண்ணெய்யாகவும் மாற்றப்படுகின்றது. |
| மூலதன முதலீட்டு ஆபத்து | ஏதிர்பார்த்த இலாபம் கிடைக்கப் பெறாமை மற்றும் முதலீட்டின் மீது எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப் பெறாமை போன்ற அபாயங்கள் | முதலீட்டு மட்டம் மற்றும் மீளச்செலுத்த வேண்டிய தொகை என்பவற்றின் அடிப்படையிலான மூலதன செலவினத்திற்கு கடுமையான அங்கீகார நடைமுறையை பின்பற்றுதல். |

| அபாயக் காரணி | அபாயம் பற்றிய மதிப்பீடு | அபாயக் கட்டுப்பாட்டு உபாய முறைகள் |
|---|---|---|
| கடன் இடர் | கொள்வனவாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் தொகை கிடைப்பதற்கான தாமதப்படுத்தப்படுவதற்கான நிகழ்தகவு அல்லது உரிய விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் மீறப்படுவதற்கான சாத்தியக்கூறு. | கொள்வனவாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைகளை வசூலிப்பதற்காக உண்ணிப்பான கண்காணிப்பு செயல்முறையை ஏற்படுத்தல்<br><br>நீண்ட காலமாக செலுத்தப்படாத கட்டணங்களுக்கு அல்லது அது தொடர்பாக பதில் எதுவும் தராத கொள்வனவாளர்களுக்கு எதிராக அதிகாரமுள்ள சட்ட தலையீடுகளை ஏற்படுத்தல்<br><br>அரச குத்தகை கட்டணங்களை கூர்ந்து கண்காணித்து அவற்றை தாமதமின்றி செலுத்துதல் |
| முகாமைத்துவ ஆளணி | ஊக்குவித்தல் குறைவாக காணப்படுகின்றமை, தொழில் பற்றிய குறைவான அறிவு என்பவனுவும் குறைந்த விளைவுப் பெருக்கம் மற்றும் வெளியிடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தகின்றன.<br><br>சிறந்த ஊதியம் அல்லது உயர் பதவிகளுக்கு ஏனைய கைத்தொழில்களுக்கு அல்லது கம்பனிகளுக்கு ஊழியர்கள் செல்கின்றமை | பொறுப்பேற்ற செயலமர்வுகள் மற்றும் பயிற்சி பாடநெறிகள்<br><br>நிதிசார் ஊக்குவிப்புகள் மற்றும் நலனோம்புகை நடவடிக்கைகள் என்றவகையில் ஊழியர் நலன்களை மேம்படுத்தல்<br><br>வழமையாக கலந்துரையாடல்கள் ஊடாக தொழிற் சங்கங்களுடன் ஆரோக்கியமான தொடர்புகளை பேணுதல்.<br><br>ஊழியர்களுக்கு உரித்தான நலன்கள் தொடர்பில் அனைத்து ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகளுடனும் இயைந்து செல்வதை உறுதிப்படுத்தல்.<br><br>சாத்தியமான வகையிலும் பொருத்தப்பாட்டுக்கு தக்கதாகவும் சிரேட்ட பதவிநிலைகளுக்கு உள்ளிருந்து பதவி உயர்வுகளை உறுதிப்படுத்தல் |
| ஆதன ஆபத்துகள் | தீ, கொள்ளை, இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்களின் சீர்குலைவு.<br><br>மின்னல்:. வேள்ளம், கிருமிநாசனிகள் விலங்குகள் மற்றும் காரணிகளினால் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தங்கள் | அனைத்து கட்புலனாகும் ஆதனங்களுக்குமான விரிவான காப்புறுதி காப்பை பெற்றுக்கொள்ளுதல்.<br><br>ஒரு இடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு ஆதனங்களை நகர்த்துவது தொடர்பாக கடுமையான நடைமுறைகளை பின்பற்றுதல்.<br><br>நிலங்களை சுற்றிவர தீ பரவாமல் இருப்பதற்கு தீ இடைவெளி மற்றும் ஏனைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தாபித்தல்.<br><br>தடுப்பு பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அடிக்கடி மேற்கொள்ளல்<br><br>நல்ல விவசாய முறைகளை பின்பற்றுதல் |
| மூலதன முதலீட்டு இடர் | எதிர்பார்க்கப்பட்ட இலாபத்தை அடைய முடியாத இடர் மற்றும் முதலீட்டுக்கான விரும்பிய பெறுபனவுகளை பெற்றுக்கொள்ள இயலாமை | முதலீட்டு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மீளப்பெறல் பெறுமதி அளவை அடிப்படையாக கொண்டு அங்கீகரிக்கப்பட்ட கடுமையான காரியக் கிரமம் ஒன்றை ஏற்படுத்தல். |
| புகழுரு ஆபத்து | வேலைவாய்ப்பு, வியாபாரம் மற்றும் ஒரு தாபனத்தின் ஏனைய நடைமுறைகள் தொடர்பான கோட்பாடுகள், நடைமுறைகள், தராதரங்கள், விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் பற்றிய அறிவு போதியதாக இன்மை.<br><br>உற்பத்திகள் நுகர்வோர் அல்லது சந்தை கேள்விகள் மற்றும் தராதரங்களை அடையாமை.<br><br>செயலாற்றுகை, இலக்குகள் மற்றும் தராதரங்கள் தொடர்பான குறைவான அறிவு. | ஊழியர்கள், வங்கியாளர்கள், வாடிக்கையாளர்கள், ஒழுங்குறுத்துகையாளர்கள் போன்ற பல்வேறு பங்குதாரர்களுடன் வினைத்திறன் மிக்க தொடர்பாடலை உறுதிப்படுத்தல்.<br><br>உற்பத்தி மற்றும் தயாரிப்பு செயன்முறை மற்றும் உடன்பாட்டு தராதரங்களில் தரத்தை உறுதிப்படுத்தல்.<br><br>நிறுவனத்தின் செயலாற்றுகையை தொடராக இலக்குப்படுத்தப்பட்டதாக இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மாதாந்த அடிப்படையில் வரவு செலவுத் திட்ட செயன்முறை மற்றும் வரவு செலவுத் திட்ட கட்டுப்பாட்டு பொறிமுறை என்பவற்றை உரியமுறையில் கொண்டிருத்தல்<br><br>பொருட்கள் சேவைகளின் உற்பத்திதிறன் பற்றி நுகர்வோர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளல். |

## கனக்காய்வுக் குழு அறிக்கை

ஒவ்வொரு அரச அமைப்புக்களுக்கும் கணக்காய்வுக் குழு ஒன்று நிறுவுவது என்பது சட்டபூர்வமான தேவைப்பாடாகும். இக்குழு ஆகக்குறைந்தது மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற நிர்வாகக்குழு உறுப்பினர்களையும், ஒரு கருவூலப் பிரதிநிதி அல்லது முன்னுரிமை தலைமையில் நிதி முகாமைத்துவத்துவ திறமைகளை கொண்டிருக்கக்கூடிய ஒருவராக இருக்க வேண்டும். இக்குழுவானது வழக்கமான அடிப்படையில் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளருடன் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் மற்றும் அவசியமான நடவடிக்கைகளுக்கான பரிந்துரையுடன் பனிப்பாளர் குழுவுக்கு அதன் அவதானிப்புகளை சமர்பிக்க வேண்டும்.

### குறிப்புவிதிமுறைகள்

மக்கள் தோட்டஅபிவிருத்திஅமைச்சின் சுற்றறறிக்கைஎண்: PED:55கு அமையபணிப்பாளர் சபையின் ஆணையகத்தினால் அமைத்துநிர்தேசிக்கப்பட்டுவிசேடகட்டளைகள் மற்றும் நியமங்களுக்குஅமையகணக்காய்வுக் குழு இயங்கிவருதின்றது. உள்ளகக் கணக்காய்வாளர் பகுதியின் பொறுப்புக்களை தீர்மானித்தல், வருடாந்தகணக்காய்வுத்திட்டம், உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புகள் மதிப்பீடு, உள்ளகமற்றும் வெளியக கணக்காய்வு அறிக்கைகளின் மீளாய்வு, முகாமைத்துவக் கடிதங்கள் என்பனவற்றில் இக்கழுஅவதானம் செலுத்தியுள்ளது.

### தொகுப்பு

மக்கள் தோட்டஅபிவிருத்திஅமைச்சின் சுற்றறறிக்கைஎண் : ீநுனு: 55படிசிலாபம் பெருந்தோட்டநிறுவனத்தின் கணக்காய்வுக் குழுவானது 03 நிறைவேற்றுத் தரமல்லாதபனிப்பாளர் சபை உ று ப் பி ன ர் க ளை யு ம் கு ழு வி ன் தலைவராகதிறைசேரியிரதிநிதிஒருவரையும் கொண்டு அமையப்பெற்றுள்ளது.

**தற்போதைய கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் கீழ்காணுமாறு.**

| | |
|---|---|
| திரு. பீ.பீ.எஸ்.சீ. நொனிஸ் | பணிப்பாளர் / செயற்குழுவின் தலைவர் |
| திரு. ஏ லக்கதாஸ் | பணிப்பாளர் |
| திரு. ஆனந்த புஷ்பகுமார | பணிப்பாளர் |

பெருநிறுவன ஆலோசணை நிறுவனம், (பணிப்பாளர் சபை செயலாளர்கள்) கணக்காய்வாளர் குழுவின் செயலாளராகவும் திரு. விமல் ஹேமசந்திர, (சிரேஷ்ட உள்ளகக் கணக்காய்வாளர்) குழுவின் கூட்டுனராகவும் செயற்பட்டனர்

### கூட்டம் மற்றும் வருகை

2017 நிதி ஆண்டுக்காக 5 முறைகள் கணக்காய்வுக் குழுவானது கூடியது மற்றும் வருகைகள் தொடர்பான விபரங்கள் கீழ்காணுமாறு,

| குழு அங்கத்தவர்களின் பெயர்கள் | மார்ச் 10 | ஜீன் 28 | ஆகஸ்ட் 14 | நொவெம்பர் 01 | டிசம்பர் 14 |
|---|---|---|---|---|---|
| திரு. பீ.பீ.எஸ்.சீ. நொனிஸ் | √ | √ | √ | √ | √ |
| திரு. ஏ. லக்கதாஸ் | √ | √ | √ | √ | √ |
| திரு. ஆனந்த புஷ்பகுமார | √ | √ | - | - | - |

(திரு. ஆனந்த புஷ்பகுமார குழுவின் அங்கத்தவராக 28.06.2017 வரை செயற்பட்டார்.)

புணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள், சிரேஷ்ட முகாமையாளர்கள், மற்றும் கணக்காய்வு தலைமையகமாவன இச்சந்திப்பில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டனர். 2017 ஆம் ஆண்டுக்கான சந்திப்பில் தோட்டங்களின் கணக்காய்வு அறிக்கை தொடர்பான நடைமுறை ஒழுங்கு, விஷேட புலணாய்வு அறிக்கை, திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமையகத்தினால் திரட்டப்பட்ட கணக்காய்வு தணிக்கை வினவல்கள் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தினால் அதற்கு வழங்கப்பட்ட பதில்கள் (etc..) என்பன கலந்தாலோசிக்கப்பட்டன.

### உடண்பாடு

நிறுவனத்தில் நடைமுறையிலுள்ளவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அமையசெயற்படுவதாகவும் மற்றும் நிதி அறிக்கைகள் இலங்கைகணக்காளர் கட்டளைகளின் படிஅமைந்துள்வதாகலும் கணக்கபய்வுக் குழு பணிப்பாளர் சபைக்கு உறுதியளித்துள்ளது. குழுவின் காணப்படுகின்ற உள்ளக்கட்டுப்பாடு மற்றும் அபாய முகாமைத்துவம் தொடபைான முறைமைகள் மதிப்பீடு செய்யப்படுவதோடு நடை முறையிலுள்ள உள்ளக்கட்டுப்பாட்டு அமைப்பினை வலுப்படுத்து வகற்கு தேவையான நிலைமைகளில் மேலதிக உள்ளககட்டுப்பாடடு அமைப்புமற்றும் அவதானங்களை குறைத்துக் கொள்வதற்கான உபாயங்கள் பனிப்பாளர் சபைக்கு முன்மொழியப்படுகின்றது.

மேலும் இக்குழுவின் மூலமாக நிறுவனதின் நாளாந்த வியாபார நடவக்கைகள் மீளாயப்படுவதோடு எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ள வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படல் மற்றும் நிதிக்கூற்றுக்கல் தொடர்ந்தியங்கும் ணெ்ணக்கருவின் அடிப்படையில் அமைக்கப்படுகின்றது என்பதனையும் உறுதிப்படுத்துதல்.

### வெளியகக் கணக்காய்வு

கணக்காய்வாளர் தலைமையகம் சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் வெளிக்கணக்காய் வாளர்களாக செயற்பட்டது.



**திரு. பீ.பீ.எஸ்.சீ. நொனிஸ்**
தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

சிலா/ பெருந்தோட்ட நிறுவனத்தின் 2017 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றினையும் ஆண்டறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமையகத்தின் அறிக்கையையும் நிறுவனம் சார்பாக சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை பெருமகிழ்ச்சி அடைகின்றது.

**சட்ட நிலை**

1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பகிரங்க கம்பனிகளுக்குள் அரச உடைமை வியாபார பொறுப்பேற்றல் சட்டம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனங்களின் மாற்றத்திற்கமைய 18 யூன், 1992 ஆந் திகதி 719/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்த மானியினால் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க உடைமையாக்கப்பட்ட கம்பனி. புத்தளம் மாவட்டத்தினுள் JEDB (IV)இனால் உடைமையாக்கப்பட்டுள்ள எல்லா தோட்டங்களையும் உள்ளடக்குகின்ற எல்லா பயிர்ச்செய்கை சொத்துக்கள், அதி விசேட வர்த்தமானிக்கமைய CPLஇற்கு அளிக்கப்பட்டுள்ளதுடன் குத்தகை ஒப்பந்தங்களின் எண்ணிக்கைக்கமைய 53 ஆண்டுகளுக்காக JEDBமற்றும் CPLஇற்கிடையில் குத்தகை ஒப்பந்தங்கள் பின்னர் கைசாத்திடப்பட்டது.

நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட பிராதான அலுவலகம் இல. 165, புத்தளம் வீதி, சிலாபம் மற்றும் இல. 191, ஜே.ஆர். ஜயவர்தன கேந்திரம், தர்மபால மாவத்தை, கொழும்பு 07 இலும் அமைந்துள்ளது. தோட்டங்கள் புத்தளம், குருணாகலை, கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ளன.

**கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறு 06 தோட்டங்களின் கீழ் பரிபாளிக்கப்படுகின்றது.**

- பளுகஸ்வெவ தோட்டம்
- பிங்கிரிய பிரதேச பெருந்தோட்டம்
- சிலாபம் பிரதேச பெருந்தோட்டம்
- மாதம்பை பிரதேச பெருந்தோட்டம்
- தம்பபன்னி பிரதேச பெருந்தோட்டம்
- திவுலபிட்டிய பிரதேச பெருந்தோட்டம்

**பிரதான செயற்பாடுகள்**

சிலா/பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதான செயற்பாடபானது பயிர்ச்செய்கை, தென்னை உற்பத்தி மற்றும் விற்பனை, மரமுந்திரிகை, ஏனைய விவசாய உற்பத்தி மற்றும் பாற்பண்ணை.

**நிதிக்கூற்று**

40 தொடக்கம் 70 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களானவை 2018 10ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினரால் அங்கீகரிக்கப்பட்டது.

**கணக்காய்வாளரின் அறிக்கை**

கணக்காய்வாளர் தலைமையகத்தின் கணக்காய்வாளர் கூற்றானது நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களில் பக்கம் 37 - 39 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கம் 44 - 53 களில் இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்போது ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவுமில்லை.

**தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு**

எதிர்காலத்தில் அதன் இயக்கங்களைத் தொடர்வதற்கு போதிய வளங்களை கம்பனி கொண்டுள்ளதையிட்டு பணிப்பாளர் சபையானது திருப்தியடைகின்றது. இதற்கமைய நிதிக்கூற்றுகள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுகின்றன.

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

2017ஆம் ஆண்டில் நிறுவனத்தின் பணியாற்றிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் - 2017**

| | |
|---|---|
| திரு. வீ.கே.சீ. ஹேரத் (14.07.2016 இலிருந்து) | தலைவர் |
| திரு. எம்.கே.பீ. செனவிரத்ன (08.05.2015 இலிருந்து) | நிறைவேற்று பணிப்பாளர் |
| திரு. பீ. சீ. விஜேவர்தன (24.02.2017 இலிருந்து) | செயற்பாட்டு பணிப்பாளர் |
| திரு. பீ.பீ.எஸ்.சீ. நொனிஸ் (05.09.2016 இலிருந்து. | பணிப்பாளர் / திறைசேரி பிரதிநிதி |
| திரு. ஏ லக்கதாஸ் (19.05.2016 இலிருந்து) | பணிப்பாளர் |
| திரு. கே.ஜீ.ஏ புஷ்பகுமார (14.07.2016 இலிருந்து) | பணிப்பாளர் (24.02.2017 - மீள பெறப்பட்டது.) |
| திரு. எச்.எம்.என்.சீ. ஹேரத் (20.03.2015 இலிருந்து) | பணிப்பாளர் |

**கணக்காய்வுக் குழு**

சபையின் பின்வரும் பணிப்பாளர்கள் கணக்காய்வுக் குழுவில் கடமையாற்றிய வருடத்தின்போது ஐந்து மதிப்பீடுகளை நடத்தினர்

**கணக்காய்வுக் குழு – 2017**

| | |
|---|---|
| திரு. பீ.பீ.எஸ்.சீ. நொனிஸ் | தலைவர் (AMC) |
| திரு. ஏ லக்கதாஸ் | உறுப்பினர் (AMC) |
| திரு. ஏ புஷ்பகுமார | உறுப்பினர் (AMC) (24.02.2017 வரை) |
| கணக்காய்வாளர் தலைமையகம் | கண்காணிப்பாளர் |

**செயல் நிறைவேற்றுகை மீளாய்வு**

ஆண்டின் போது நிறுவனத்தில் செயல் நிறைவேற்றுகை பற்றிய மீளாய்வும் முக்கியமான முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களும் தலைவரின் மீளாய்வு மற்றும் முகாமைத்துவ மீளாய்வின் கீழ் வழங்கப்பட்டுள்ளன

**வருமானம்**

2017 ஆம் ஆண்டுக்கான நிறுவனத்தின் வருமானம் ரூபா. 516 மில். (2016-ரூபா. 383 மில்.) ஆண்டுக்கான ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா. 59 மில். (2016-ரூபா. 66 மில்.)

ஆண்டுக்குள் ஈட்டப்பட்ட வட்டி வருமானமானது ரூபா. 18 மில். இது தொடர்பான தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிதிப் பெறுபேறு**

நிறுவனத்தின் வரிக்கு முன் இலாபமானது 126.4 மில். ஆகும். (2016 - ரூபா. 84.8 மில்)

வரிப் பெறுமதி ரூபா. 44.9 மில்லியன்களை கழித்த பின் நிறுவனத்தின் வரிக்கு பின் இலாபமானது, ரூபா. 81.4 மில். ஆகும். (2016 - ரூபா. 69.6 மில்). நிதிப் பெறுபேறுகள் தொடர்பான தகவல்கள் முற்றடக்க வருமானக் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிலையான சொத்துக்கள்**

2017 ஆம் ஆண்டில் நிறுவனமானது ரூபா. 84 மில். (2015 - ரூபா. 86 மில்) கீழ் / புதிய பயிர்ச்செய்கையில், முதிர்வுறாத பயிர்ச்செய்கைகள் முகாமைத்துவத்திலும் மற்றும் ரூபா. 30 மில். களை ஆதனம், பொறி, உபகரணங்களிலும் முதலீடு செய்தது. (2016 –ரூபா. 16 மில்).

நடைமுறை அல்லாத சொத்துக்களில் தேறிய புத்தகப் பெறுமதியானது (ஆதனம், பொறி, உபகரணங்கள், குத்தகை உரிமை, உயிரியல் ஆதனங்கள் etc…) 2017 இல் ஐந்தொகை தினத்தில் ரூபா. 1,062 மில். (2016 - ரூபா. 978 மில்) ஆகும். இது தொடர்பான தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 4 – 8 மற்றும் 11 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறுங்கால முதலீடுகள்**

நிறுவனத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான குறுங்கால முதலீடுகளாவன ரூபா. 190.3 மில். களுடன் ஒப்பிடும் போது 2016 இல் ரூபா. 140.8 மில்லியன்கள் ஆகும்.

இம்முதலீடானது இலங்கை வங்கியின் நிலையான வைப்பு ரூபா. 102.3 மில்லியன்களையும் ரூபா. 88 மில்லியன்கள் திறைசேறி உண்டியல்கள்களையும் உள்ளடக்கி உள்ளது.

**ஒதுக்கங்கள்**

31.12.2017 இல் நிறுவனத்தின் ஒதுக்குகனை பிரதிநிதித்துவப்படுத்தி நிறுத்தி வைத்த இலாபங்கள் ரூபா. 665.58 மில. மற்றும் தேக்கு மர ஒதுக்குகள் 82.3 மில்லியன்களும் ஆகும்.

ஒதுக்கல்களில் நகர்வுகளும் ஆக்கக்கூறுகளும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உரிமையாண்மை மாற்றல் கூற்றுக்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன.

**வரிவிதிப்பு**

நிறுவனமானது 10% வருமான வரியின் விவசாயத்தின் இலபாத்தில் 28% பொறுப்பும் ஏனைய வருமானங்களில் 28% பொறுப்பும் கொண்டுள்ளது. வரிவிதிப்பு தொடர்பான மேலதிக தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இல. 23 இல் விபரிக்கப்பட்டுள்ளது.

**கூறப்பட்ட மூலதனம்**

31.12.2017 இல் மொத்த கூறப்பட்ட மூலதனமாக ரூபா. 200,000,010. இது சாதாரண பங்குகள் 20,000,001 சாதாரண பங்குகள் உட்பட பொன்னான கங்கொன்றையும் உள்ளடக்கியுள்ளது. வருடத்துக்கும் பங்கு வழங்கள்கள் எதுவும் இடம்பெறவில்லை.

**மூலதனக்கடப்பாடுகளும் வருநிகழ்வான பொறுப்புக்களும்.**

வருநிகழ்வான பொறுப்புக்கும் மூலதனக் கடப்பாடுகளும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இல. 27 இல் விபரிக்கப்பட்டுள்ளன.

**ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்.**

ஐந்தொகை திகதிக்கு பின்னர் நிறுவனத்தில் பொருள் ரீதியான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய குறிப்பு இல. 25 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு புறம்பாக வேறெந்த நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

**ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஆர்வங்கள்**

நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களில் குறிப்பு 26 கு மேலதிகமாக பணிப்பாளர்கள் நேரடியான அல்லது மறைமுகமான ஆர்வங்களை கொண்டிறுக்கவில்லை.

**பணிப்பாளர்களின் பங்குகள்**

நிறுவனத்தின் பணிப்பாளர்களோ அல்லது அவர்களின் வாழ்க்கை துணையினரோ பங்குகள் எதனையும் வைத்திருக்கவில்லை.

**தொழில்வாய்ப்பு**

நிறுவனமானது வேலைவாய்ப்பு உள்ளிட்ட அதனுடன் தொடர்புடைய தெரிவுசெய்தல், பயிற்சி, பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆகியவற்றில் சமமான வாய்ப்பு கொள்கையினை நடைமுறைப்படுத்தி வருவதுடன் நிறுவனத்தின் தெறிவுகள் யாவும் நிறுவனத்தின் நீடுறுதியான நன்மையை கருத்தில்கொண்டு அரசாங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுக்கு விதிகளுக்கு ஏற்ப தகுதியின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. நிறுவனம் பால்நிலை, இனத்துவம், சமயம், திருமண அந்தஸ்த்து அரசியல் அபிப்பிராயம் மற்றும் உடல் ரீதியான அங்கவீனம் ஆகியவற்றினை கருத்தில் கொள்ளாது நிறுவனத்தின் நலனுக்கு இயைபுற்று சமமான வாய்ப்பு எனும் கொள்கையை பின்பற்றி வருகின்றது.

**நியதிச்சட்ட கொடுப்பனவு**

பனிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கு எட்டிய வகையில் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய சகல வரிகள், தீர்வைகள், கொடுப்பனவுகள், நிறுவனத்தின் ஊழியர்கள் சார்பில் அவர்களுக்காக செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் வரிகள் போன்றவற்றையும் ஏனைய நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டிய சகல நியதிச்சட்ட கொடப்பனவுகளையும் ஐந்தெகை திகதியில் உள்ளவாறாக செலுத்தியுள்ளனர், அல்லது பொருத்தமானவாறாக அதற்கான ஏற்பாடுகளை வழங்கியுள்ளனர்.

**கணக்காய்வாளர்கள்**

2017 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் ஐயர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டது.

**வருடாந்த பொதுக்கூட்டம்**

வருடாந்த பொதுக்கூட்டமானது இல. 02, யோர்க் தெரு, கொழும்பு 01இல் அமைந்துள்ள "கிரேன்ட் ஓரியன்டல் ஹோட்டலில்" 07.06.2019 அன்று பி.ப 2 அளவில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வருடாந்த பொதுக்கூட்டத்துக்கான அறிவித்தலும் பெறுகைப்படிவமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பனிப்பாளர் சபைக்காகவும் அதன் சார்பிலும்

..........................................
**திரு.வீ.கே.சீ.ஹேரத்**
தலைவர்/பி.நி. அதிகாரி

..........................................
**திரு.எம்.கே.பீ.செனவீரத்ன**
நிறைவேற்று பனிப்பாளர்

**பெரு நிறுவன ஆலோசணை சேவைகள் தனியார்**
நிறுவனம்
செயலாளர்கள் -
சிலா/ பெருந்தோட்ட நிறுவனம்
கொழும்பு.

# பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிதி அறிக்கைப்படுத்தல் தொடர்பில் தாம் கொண்டுள்ள பொறுப்பை சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கின்றது. நிறுவனத்தின் கணக்காய்வாளரான கணக்காய்வாளர் தலைமையகம், பொறுப்புக்கள் தொடர்பில் தங்களது அறிக்கையில் சுருக்கமாக விளக்கியுள்ளனர்.

இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 2017 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடையும் வருடத்திற்கான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு இணங்கத் தயாரித்துள்ளதுடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க தகவல்களை அதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.

நிறுவனம் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தியுள்ளது எனவும் அம் முறைகளும் கணக்கீட்டுக் கொள்கைப்படுத்தல்களும் இந்நிதிக் கூற்றைத் தயாரிக்கும் போது எப்போதும் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

இத்தர நியமங்கள் மாற்றமடையும் சந்தர்ப்பங்கள் ஏதும் இருப்பின் அவற்றை உரியமுறையில் சுட்டிக்காட்டி அதற்கான நியாயங்கள் கூறப்பட்டுள்ளன. யதாரத்த பூர்வமான முறையிலும் நியாயமான முறையிலும் அனைத்துத் தீர்மானங்களும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களும் மதிப்பீடுகளும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் கூறும் பொறுப்பை பணிப்பாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். நிறுவனம் தமது நிதிநிலைமையையும் உண்மைத் தன்மையையும் காட்டும் கணக்கீட்டு அறிக்கைகளை உரிய முறையில் பேணிவரப்படும் என பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது. ஆண்டறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மூலம் நிறுவனம் நாளாந்த செயற்பாடுகள் உண்மையான முறையிலும் நியாமான முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றனஎன்றுபணிப்பாளர் சபை 31 டிசம்பர் 2017 இல் உறுதிப்படுத்துகின்றது.

நிறுவனத்தின் உள்ளக நிர்வாகத் தொகுதி தொடர்பான முழுமையான பொறுப்பு பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திரவத்தன்மை தொடர்பான பிழையான கூற்றுக்கள் மற்றும் மோசடிகளை முழுமையாக நடைமுறைப்படுத்தி உள்ளகச் சுருக்கம், உள்ளகக் கணக்காய்வு, நிதிமற்றும் வேறு நிர்வாக முறைகள் மூலம் ஏற்படக்கூடிய திரவத் தன்மை தொடர்பான பிழையான கூற்றுக்கள் மற்றும் மோசடிகளை அல்லது நியாயமான காலத்தினுள் அறிந்து கொள்வதற்கு முடியுமான முறையில் அனைத்துச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கும் கொடுக்கல் வாங்கல்களை உரியமுறையில் காட்டுவதற்கு முடியுமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் உறுதிப்படுத்துகின்றது. எதிர்வரும் பலவருடங்களில் தொடர்ச்சியாகப் பேணி வருவதற்கான வளங்கள் போதியளவு உள்ளது எனவும் பணிப்பாளர் சபை கருதுகின்றது. அத்துடன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கின்ற போது தொடர்ச்சியாக மாற்றமின்றிப் பின்பற்றப்படும்.

நிறுவனத்தின் கணக்காய்வாளர்களான கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் - பட்டயக் கணக்காளர்கள் தனது பொறுப்பை மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்துத் தகவல்களையும் ஒத்துழைப்பையும் பணிப்பாளர் சபை வழங்கியது.

கணக்காய்வாளர்கள் அனைத்து நிதிக் கூற்றுக்களையும் நிதி அறிக்கைகளையும் உரிய தரவுகளையும் பரிசீலித்து தங்களது சுதந்திரமான கருத்துக்களைச் சமர்ப்பித்துள்ளனர். அவ்வறிக்கை இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நிறுவனம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது செலுத்த வேண்டியிருந்து கண்டறியப்பட்ட அனைத்து வரிகளும் நிறுவனத்தின் ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளும் நிறுவனம் செலுத்தவேண்டிய ஏனைய நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன அல்லது செலுத்துவதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் உறுதியளிக்கின்றனர்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

[signature]

வ/ப கோபரேட் அட்வைசர் சேர்விஸ்ஸ (தனியார்) நிறுவனம்
செயலாளர்கள் - சிலாபம் பெருந்தோட்டநிறுவனம்

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. PLA/A/CPL/01/17/ 01 — මබේ අංකය / உமது இல. / Your No. — දිනය / திகதி / Date 11th September 2018

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின்
பங்குதாரர்களிற்கு.

**வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும், பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

(அ) கம்பனிக்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 142,502,287 பெறுமதியான 5,733 ஹெக்டெயர்கள் பரப்பளவுள்ள காணிகள் தொடர்பிலான திட்டங்களுடன் கம்பனி சுவீகரித்திருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மக்கள் தோட்டங்கள் அபிவிருத்தி சபை மற்றும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து முறையே ரூபா 47,627,397 மற்றும் 23,610,959 பெறுமதிகள் அறவிடவேண்டியது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிப்படுத்தல்கள் கடிதத்தின் பிரகாரம் அவை முறையே கணக்குகளில் முறையே ரூபா 63,672,397 மற்றும் 31,610,959 தொகைகளினுடைய பெறுமதிகள் காணப்பட்டது.

(இ) இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனம் மற்றும் அரச வளங்கள் மற்றும் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சிற்கு 2010 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட குறுங்காலக் கடன்களுக்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே அறவிடவேண்டிய ரூபா 10,000,000 மற்றும் ரூபா 15,000,000

உறுதிப்படுத்தும் மீதிகள் தொடர்பான மீதி உறுதிப்படுத்தல்கள் கடிதங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு,

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது,

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும் மற்றும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**வருடாந்த அறிக்கைகளினை சமர்ப்பித்தல்**

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்

## முற்றடக்கிய வருமானக் கூற்று

| 31 டிசம்பர் முடிவுற்ற ஆண்டுக்கான | குறிப்பு | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|
| வருமானம் | 19 | 516,178,934 | 383,089,914 |
| விற்பனை கிரயம் | | (310,604,719) | (234,382,941) |
| **மொத்த இலாபம்** | | **205,574,215** | **148,706,973** |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம், மற்றும் கிடைப்பனவுகள் | 20 | 59,159,259 | 65,941,736 |
| நிர்வாக செலவுகள் | | (110,679,954) | (102,545,104) |
| ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | | (12,352,180) | (8,692,761) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உழைக்கப்பட்ட இலாபம்** | | **141,701,341** | **103,410,843** |
| தேறிய நிதி வருமானம் / (செலவுகள்) | 21 | (15,286,608) | (18,594,220) |
| **வரிக்கு முன் இலாபம்** | 22 | **126,414,733** | **84,816,623** |
| வரி செலவுகள் (ஒதுக்குகள்) | 23 | (44,968,495) | (15,144,615) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **81,446,237** | **69,672,008** |
| **ஏனைய முற்றடக்க வருமானம்** | | | |
| திட்டவட்டமான ஊழியப் பயன்திட்ட மதிப்பீட்டு பெறுகை /(இழப்பு) | | 702,850.00 | 1,091,543 |
| **ஆண்டுக்கான மொத்த முற்றடக்க வருமானம், வரிக்கு பின்** | | **82,149,087** | **70,763,551** |
| பங்கொன்றுக்கான அடிப்படை உழைப்பு (ரூபா.) | 24 | **4.07** | **3.48** |

கழிக்கப்பட வேண்டியவைகள் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன.

44 முதல் 70 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**சிலாபம்**
**2018 ஆகஸ்ட் மாதம் 10 ஆந் திகதி**

# வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்

## நிதி நிலமைக் கூற்று

| 31 டிசம்பர் அன்று | குறிப்பு | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடை முறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| JEDB தோட்டங்களின் வெற்றுக் காணிகளுக்கான குத்தகை உரிமை | 04 | 73,799,983 | 76,488,705 |
| JEDB தோட்டங்களின் குத்தகைக்குப் பெறப்பட்ட ஆதனம்,பொறி,உபகரணம் (காணிப் பயன்பாட்டு உரிமை மற்றும் குத்தகையிலான உயிரியல் ஆதனங்கள் தவிர) | 05 | 960,504 | 1,434,812 |
| JEDB பெருந்தோட்டங்களின் குத்தகை கொள்ளப்பட்ட உயிரியல் ஆதனங்கள் | 06 | 24,044,542 | 26,893,743 |
| குத்தகை சொத்துக்களை முன்னேற்றுதல் | 7.1 | 778,042,874 | 701,639,467 |
| உயிரியல் ஆதனங்கள் - கால்நடைகள் | 7.2 | 16,096,612 | 25,237,670 |
| நுகரத்தக்க உயிரியல் ஆதனங்கள் | 7.3 | 54,522,442 | 42,245,501 |
| குத்தகையில்லாத ஆதனம், பொறி, உபகரணங்கள் | 08 | 106,238,263 | 96,643,719 |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 11.1 | 8,384,410 | 7,598,658 |
| | | 1,062,089,630 | 978,182,276 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 09 | 58,753,590 | 100,758,752 |
| வியாபார மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் | 10 | 34,686,633 | 48,435,673 |
| அரசாங்க தொழில்முயற்சிகளுக்கான கடன் வசதிகள் | 11 | | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் | 11.1 | 3,735,301 | 3,413,278 |
| ஏனைய நடைமுறை சொத்துக்கள் | | 1,726,563 | 1,929,727 |
| குறுங்கால முதலிடுகள் | 12 | 190,312,500 | 140,868,261 |
| கையிருப்பாகவும் வங்கியிலும் உள்ள காசு | | 4,465,074 | 5,087,898 |
| | | 293,679,661 | 300,493,589 |
| மொத்த சொத்துக்கள் | | **1,355,769,291** | **1,278,675,864** |
| | | | |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 13 | 200,000,010 | 200,000,010 |
| நிறுத்தி வைத்த உழைப்புக்கள் | | 665,548,027 | 633,885,863 |
| மர (Timber) ஒதுக்கங்கள் | | 82,327,840 | 61,840,917 |
| **மொத்த உரிமையாண்மை** | | 947,875,877 | 895,726,790 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்களும் பிற்போடப்பட்ட வருமானங்களும்** | | | |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்புக்கள் | 14 | 101,325,132 | 61,850,251 |
| பிற்போடப்பட்ட கொடைகள் மற்றும் மானியங்கள் | 15 | 6,395,901 | 6,791,464 |
| ஓய்வுதியப் பயன் கடப்பாடுகள் | 16 | 74,382,849 | 72,493,267 |
| JEDB/SLSPC பெருந்தோட்ட குத்தகைக் கொடுப்பனவுப் பொறுப்புக்கள் | 17 | 105,004,349 | 107,223,139 |
| | | 287,108,231 | 248,358,121 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 18 | 121,213,233 | 135,832,364 |
| செலுத்தப்பட வேண்டிய வருமான வரி | | (2,646,841) | (3,374,863) |
| JEDB/SLSPC பெருந்தோட்ட குத்தகைக் கொடுப்பனவுப் பரிப்புக்கள் | 17 | 2,218,790 | 2,133,452 |
| | | 120,785,182 | 134,590,953 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பரிப்புக்கள்** | | **1,355,769,291** | **1,278,675,864** |

அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ளவை கழிக்க வேண்டியவற்றை குறிக்கும்.
44 முதல் 70 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுக் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு அவசியமான பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**உறுதிப்படுத்துதல்**

2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதிக் கூறறுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றேன்

**திரு. ரொஹான் ரத்நாயக**
சிரேஷ்ட கணக்காளர்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமான முன்னிலைப்படுத்தல் என்பன பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்காகவும் அவர்கள் சார்பாகவும் அங்கீகாரமளிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டது.

**திரு. வீ.கே.சீ ஹேரத்**
(தவிசாளர்)

**திரு. எம்.கே.பீ. செனவிரத்ன**
(நிறைவேற்றுப் பணிப்பாளர்)

**சிலாபம்**
**2018 ஆகஸ்ட் மாதம் 10 ஆந் திகதி**

## உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று

31 டிசம்பர் 2017 அன்று முடிவடைந்த ஆண்டுக்கானது

| விபரம் | கூறப்பட்ட மூலதனம் | மர ஒதுக்குகள் | திரண்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| **2016 ஜனவரி 01 அன்று இருந்தவாறான மீதி** | 200,000,010 | 56,686,451.67 | 598,276,777 | 854,963,239 |
| ஆண்டுக்கான இலாபம் | | | 69,672,008 | 69,672,008 |
| மொத்த முற்றடக்க வருமானங்கள் | - | | 1,091,543 | 1,091,543 |
| மர (Timber) ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது. | - | 5,154,465 | (5,154,465) | |
| மொத்த முற்றடக்க வருமானங்கள் | | 5,154,465 | 65,609,086 | 70,763,551 |
| **2015 க்கான பங்கிலாபங்கள்** | | | (30,000,000) | (30,000,000) |
| **2016 டிசம்பர் 31 அன்று இருந்தவாறான மீதி** | **200,000,010** | **61,840,917** | **633,885,862.81** | **895,726,790** |
| **ஆண்டுக்கான இலாபம்** | - | | 81,446,237 | 81,446,237 |
| ஏனைய முற்றடக்க வருமானங்கள் | | | 702,850 | 702,850 |
| மர (Timber) ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது. | | 20,486,923 | (20,486,923) | |
| மொத்த முற்றடக்க வருமானங்கள் | 200,000,010 | 82,327,839.84 | 695,548,027 | 977,875,877 |
| மர (Timber) ஒதுக்கத்துக்கு மாற்றப்பட்டது. 2016 க்கான பங்கிலாபங்கள் | | | (30,000,000) | (30,000,000) |
| **2017 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான மீதி** | **200,000,010** | **82,327,840** | **665,548,027** | **947,875,877** |

அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்டுள்ளவை கழிக்க வேண்டியவற்றை குறிக்கும்.

44 முதல் 70 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுக் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு அவசியமான பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**சிலாபம்**
**2018 ஆகஸ்ட் மாதம் 10 ஆந் திகதி**

# வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்

## காசுப்பாய்ச்சல் கூற்று

| டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கானது. | 2017<br>ரூபா. | 2016<br>ரூபா. |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 126,414,733 | 84,816,623 |
| சீராக்கங்கள்: | | |
| - பெறுமானத் தேய்வுகள் / பெறுமான இழப்புகள் | 34,566,375 | 39,174,417 |
| - ஊழியர் இலாபப் பங்குகளுக்கான ஒதுக்கங்கள் | 11,192,570 | 7,828,181 |
| - மானியங்களுக்கான பெறுமான இழப்புக்கள் | (395,563) | (398,962) |
| - அரசாங்க குத்தகைக் கட்டணங்கள் மீதான நிதிக் கட்டணங்கள் | 33,697,488 | 32,115,849 |
| - அறவிட முடியாத கடன்களுக்கான ஏற்பாடு | - | (421,258) |
| - நிதி வருமானம் | (18,410,880) | (14,193,632) |
| - திட்டவட்டமான பயன்திட்டச் செலவுகளுக்கான ஏற்பாடுகள் | 13,790,597 | 12,983,458 |
| - ஆதனம், பொறி, உபகரண அகற்றல் மூலமான இலாபங்கள் | - | 30,187 |
| - நுகரத்தக்க உயிரியல் ஆதனங்களின் பெறுகை/(இழப்பு) | (20,486,923) | (5,154,465) |
| - தென்னை மரங்களின் அகற்றல் மூலமான இலாபங்கள் | (16,884,139) | (17,356,052) |
| | 163,484,259 | 139,424,346 |
| **மாற்றங்கள்** | | |
| - கையிருப்புக்கள் | 42,005,162 | (57,386,187) |
| - பால் உற்பத்திக் கால்நடைகள் | 9,141,058 | (11,490,500) |
| - வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 18,769,672 | (9,994,653) |
| - ஏனைய நடைமுறை சொத்துக்கள் | 203,164 | 2,523,515 |
| - வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள் | 1,252,958 | 51,991,929 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உருவான காசு** | 234,856,272 | 115,068,450 |
| - விசேட பயன்திட்டக் கிரயங்களின் கொடுப்பனவு | (11,198,165) | (7,232,768) |
| - ஊழியர் இலாபப் பங்குக் கொடுப்பனவுகள் | (7,817,498) | (8,868,397) |
| - செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள் | (59,112,074) | (32,115,849) |
| - கிடைக்கப்பெற்ற நிதி வருமானங்கள் | 20,207,990 | 12,670,316 |
| - வருமான வரிக் கொடுப்பனவுகள் | (4,765,592) | (3,569,391) |
| - தென்னை மர விற்பனை மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் | 8,231,482 | 24,542 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசு** | 180,402,415 | 75,976,903 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| - ஆதனம், பொறி மற்றும் உபகரண சேர்த்தல்கள் | (30,597,470) | (16,344,955) |
| - துறைசார் அபிவிருத்திச் செலவு | (84,058,761) | (86,367,236) |
| - தென்னை மர அகற்றல் மூலமான வருமானம் | 16,966,774 | 17,465,910 |
| - ஊழியர் கடன் வழங்கள் | (5,520,550) | (6,528,200) |
| - ஊழியர் கடன் மீளப்பெறல்கள் | 3,762,458 | 3,772,691 |
| - குறுங்கால முதலீடுகள் | (37,312,500) | 8,430,257 |
| - ஆதனம், பொறி, உபகரண அகற்றல்கள் மூலம் கிடைக்கப்பெற்றவை | | (30,187) |
| **முதலீட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய தேறிய காசுப்பாய்ச்சல்** | (136,760,048) | (79,601,720) |
| **நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| - பங்கிலாப செலுத்தல்கள் | (30,000,000) | |
